விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 15 ஞாயிற்றுக்கிழமை (31.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பிரித்தானியாவில் ஊடக சுதந்திரம் உள்ளது

# சனல் 4 மீது நடவடிக்கை எடுக்க முடியாது

## கோத்தபாயவின் கோரிக்கை நிராகரிப்பு



(லண்டன்)

ஊடகங்களின் உள்ளடக்கங்களை பிரித்தானிய அரசாங்கம் கட்டுப்படுத்துவதில்லை என இலங்கைக்கான பிரித்தானிய தூதரகம் அறிவித்துள்ளது.

ஊடகத்துறையில் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டுவரும் சனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது சரணடைய வரும் விடுதலைப்புலிகளின் தலைவர்களை கொலைசெய்து விடுமாறு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்ததாக சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கோரியிருந்தார்.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்தபோதே இலங்கைக்கான பிரித்தானிய தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சனல் 4 ஒரு சுதந்திரமான ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பு ஊடகம் எனவும் ஒவ்வொரு ஜனநாயகத்திலும் சுதந்திர ஊடகம் முக்கியமானது எனப் பிரித்தானியா நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் ஊடக நிறுவனங்கள் பொருத்தமான நெறிமுறைகள் மற்றும் சட்டரீதியான தராதரங்களை பேணுவதை உறுதிப்படுத்துவதற்கான வழுவான பொறிமுறையை பிரித்தானியா கொண்டுள்ளது.

ஆனால் ஊடகங்களின் உள்ளடக்கங்களை பிரித்தானிய அரசாங்கம் கட்டுப்படுத்துவதில்லை என்றும் இலங்கைக்கான பிரித்தானிய தூதரகத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

சரண (20ஆம் பக்கம் பார்க்க)

## நிருபமா ராவை அழைத்து ஜனாதிபதி விருந்தளித்தார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று மூன்று நாள் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் கொழும்பு வந்துள்ளார்.

இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இந்நிலையில் நிருபமா ராவுக்கு நேற்று காலை உணவுடன் ஜனாதிபதி மகிந்த



இந்திய வெளிவிவகார செயலாளர் பதவியிலிருந்து நிருபமா ராவ் இன்றுடன் விடைபெறும் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் ராஜபக்ஷவால் பிரியாவிடை வழங்கப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

1973ஆம் ஆண்டு முதல் இலங்கையுடன் இணைந்து பல்வேறு வகைகளில் செயற்பட்டு வந்திருந்த நிருபமா (20ஆம் பக்கம் பார்க்க)

# வடமாகாண சபையில் சிங்கள அதிகாரிகள்!

## ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

வடக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சுக்களின் செயலாளர் பதவிகள் உட்பட வடக்கு மாகாணத்தின் முக்கிய பதவிகளில் இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்த சிங்கள இளம் அதிகாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

## திருமண வயது எல்லையை 15ஆகக் குறைக்க முயற்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் வயதெல்லையைக் குறைப்பதற்கான சட்ட மூலத்தினை தான் சமர்ப்பித்திருந்ததாகவும் அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

எனினும் சிலர் மகளிர் மற்றும் தாய்மார்களின் அமைப்புக்களினால் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அலுவலகங்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள ஐ.நா சபைக் காரியாலயத்திற்கு தேவையான பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே கோரிக்கை விடுத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழு அறிக்கை மற்றும் சனல் 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட 2 ஆவது இலங்கையின் கொலைக்களம் என்பவற்றைத் தொடர்ந்தே ஐ.நா காரியாலயத்திற்கு மீண்டமொருமுறை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் (20ஆம் பக்கம் பார்க்க)

ஆடி அமாவாசை தினமாகிய நேற்று கீரிமலையில் பல்லாயிரக் கணக்கானோர் பிதிர்த் தர்ப்பணம் செய்தனர்.



CYPRUS
Rs. 6/-
IDD Per Minute Package
#678# க்கு டயல் செய்து நுழைந்திடுங்கள், அல்லது IDDMIN என டைப் செய்து 678 க்கு SMS செய்யுங்கள்
நிலையான தொலைபேசிகளுக்கு
Dialog

## இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளை அழிக்க மேற்குலகு திட்டம்-அமைச்சர் பசில்

(மட்டக்களப்பு)

இலங்கை உட்பட பொருளாதார ரீதியில் வளர்ந்து வரும் நாடுகளை அழிக்க மேற்குலக நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகளை தடுத்து நிறுத்த ஈரான் முன்வர வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஈரான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காங்கேயனோடை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 70 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

குறைந்த கட்டணத்தில்
இந்திய, தாய்லாந்து, மலேசிய
விசா மற்றும் பயணச் சீட்டுக்களை
பெற்றுக்கொள்ள...
0777380557 0773629799
AiR MARK
Travels & Tours
IATA
No 05, Stanly Rd, Jaffna

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777


# நுகேகொட பொலிஸாரால் 206 பேர் கைது

கடந்த 24 மணித்தியாலங்களாக நுகேகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 209 பேர் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்று காலை 6 மணிவரையான 24 மணித்தியாலங்கள் நுகேகொட பொலிஸ் வலயத்திற்குட்பட்ட அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 100 பேர், குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 37 பேர், சந்தேகத்தின் பேரில் 14 பேர் மற்றும் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 6 பேர் உள்ளடங்கலாக 206 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந)


**FINANCIAL SPONSORSHIP**

UK, USA, Canada, Australia

போன்ற நாடுகளில் கல்வி கற்பதற்கு

**SPONSORSHIP**

பிரச்சினையா?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

VTL மெனேஜ்மென்ட் சேர்விஸ் (பிரை) லிமிடெட்,

இல.1, டன்ஸ்டன் ஹவுஸ்,

டன்ஸ்டன் பிளேஸ், கொழும்பு 3.

072-9994777/011-7902938


# பெற்றோரை இழந்த சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்ட 12 வயது சிறுமி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியவர் சிறுமிக்கு மாமன் முறையானவர் என தெரிய வந்துள்ளது.

யுத்தம் காரணமாக தாய், தந்தையரையிழந்த பிரஸ்தாப சிறுமி பாதுகாப்புக்காக தனது தந்தையின் சகோதரியின் வீட்டில் தஞ்சமடைந்திருந்த நிலையிலே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ந-6)


**விற்பனையாளர்கள் தேவை**

[illegible]

**தொடர்பு:**

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41,பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-3883)


# சனல் 4 தெரிவிக்கும் விடயங்கள் நிபுணர்குழு அறிக்கையிலும் உள்ளது

(கொழும்பு)

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்வது இலங்கை அரசின் கடமை எனவும் அதனைக் கண்காணிப்பது ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பு எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பிரித்தானியாவிலுள்ள சனல்4 தொலைக்காட்சி கடந்த புதன்கிழமை இரவு வெளியிட்ட இலங்கையின் போர்க்குற்ற ஆதார வீடியோ குறித்து ஐ.நா அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கேள்வி எழுப்பப்பட்டது.

சனல்4 வீடியோ குறித்து ஐ.நா நடவடிக்கை எடுக்குமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஐ.நா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்க்கி சனல்4 கூறிய விடயங்கள் நிபுணர் குழு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்தார்.

நடவடிக்கை எடுப்பது குறித்த விடயங்களை ஐக்கிய நாடுகள் நிர்வாக பிரிவுகளிடம் ஒப்படைப்பது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக மார்ட்டின் நெசர்க்கி குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் கொலைக்களம் வீடியோவை ஐ.நா பொதுச்செயலாளரின் சிரேஷ்ட ஆலோசகர்கள் பார்த்துள்ள நிலையில் பொதுச்செயலாளர் பார்த்தாரா இல்லையா என்பது தொடர்பில் தன்னால் கூற முடியாது என மார்ட்டின் கூறியுள்ளார். (ந)

# ரணில் நாடு திரும்பியதும் ஐ.தே.க. தலைமைக்கு முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் குறித்து தற்போது எழுந்துள்ள பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பில் வெளிநாடு சென்றுள்ள கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் நாட்டுக்கு வந்ததன் பின்னர் தலைமைத்துவப் பிரச்சினைக் குறித்து கலந்துரையாடப்படும்.

பிரச்சினைகளை சமுகமாகத் தீர்த்துக் கொள்ளவென கட்சியின் அனைதத்துத் தரப்பினரிடம் இருந்தும் கருத்துக்களை பெற்றுக்கொள்ளவுள்ளதாக திஸ்ஸ அத்த நாயக்க கூறினார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு அமையவே அதன் நடவடிக்கைகள் இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார். (ந)


**வீடு விற்பனைக்கு**

நாவலர் வீதியில் சுற்றுமதிலுடனும், தண்ணீர் தாங்கியுடனும் கூடிய 1 பரப்பு காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

(5584) 021 222 4745

**வீடுவிற்பனைக்கு**

கச்சேரி கிழக்கு வீதியில் 4 1/2 பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு :-0771160321

(5588) 0750434299

**மணப்பெண் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1977 திருவாதிரை, மிதுனராசி பாவம் 26, உயரம் 5'5" B.Sc. அரசபணி. 1974 பூசம், கடகராசி 6 1/2 கி.பாவம் B.Com. Dip.in.Edu. ஆசிரியர். 1981 உத்திரம் கன்னி ராசி பாவம் 15 உயரம் 5'6" B.Com. டிப்ளோமா முகாமைத்துவம் விரிவுரையாளர் மணமகன்களுக்கு பட்டதாரி மணப்பெண்கள் தேவை.

அணுகவும்: ச.க.சிவகரன் (அமைப்பாளர்)

சிவாலயா சர்வதேச திருமண நிலையம்

42/11கெனடிலேன்

இராமலிங்கம் வீதி, (பூங்கனி சோலை அருகில்)

திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

போன்:-0215681126 /0750741451

(5587)

**விற்பனைப் பிரதிநிதி (Sales Representative) தேவை**

இலங்கையில் முதற்தர விற்பனையில் முன்னோடிகளான Vimal Brand தயாரிப்புக்களை யாழ் குடாநாட்டில் விநியோகிப்பதற்கு 2, 3 வருட அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி (Sales Representative) தேவை.

தொடர்புகளுக்கு:-

S.V.Murugesu (S.V.M)

154, Hospital Road,

Jaffna.

Email:- vimaloil@sltnet.lk

(5592)

**மணமகள் தேவை**

தாரம் இழந்தவருக்கு மணமகள் தேவை. தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புக்கு:-

(5598) 0772241791

**தவறிவிட்டது**

114, புதிய அமைப்பு வீதி, பூந்தோட்டம், வவுனியா எனும் முகவரியைச் சேர்ந்த நடராஜசர்மா மதனகோபால் என்பவரது தேசிய அடையாள அட்டை (742292690V), சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் Tax, ATM card, போன்ற ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் திருநெல்வேலிக்கும் மல்லாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு:- 0773630598

(5597) 0776007743

**சித்தாமருத்துவம்**

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், நீரிழிவு ,சூதகவலி, சிறுநீரக அளர்ச்சி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி ரத்தமுக்கம், நெஞ்சுக்குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற்பருமன், மெலிவு, கோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை, குளோகோமா, இளநரை, பொடுகு போன்ற சகலவிதமான நோய்களுக்கும் பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை 1 ஆம், 2 ஆம், 3ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்

தொடர்புகளுக்கு:-

0777047371

0757380195

0771005971

Dr.கே.சிவானந்தன்

ஆனந்த வைத்திய நிலையம்

(காவல்துறை முன்பாக)

ஸ்ரேசன் ரோட் சுன்னாகம்

(சி-3882)

**உடனடி வேலைவாய்ப்பு**

நீங்கள் மாதம் 60, 000/= சம்பளம் எதிர்பார்ப்பவரா?

கனடாவின் பிரபல பல்தேசிய கம்பனியின் வன்னி மாவட்ட கிளைகளுக்கு முகாமையாளர் (Managers) உதவி முகாமையாளர் (Asst. Managers) மேற்பார்வையாளர் (Supervisores) பதவி வெற்றிடங்கள் உள்ளதால், குறைந்தபட்ச தகுதி O/L கற்றவர்களும் 18-30 வயது வரையானவர்களும் விண்ணப்பிக்கலாம்.

(5595) தொடர்புகளுக்கு:- 0776446390, 0750730371

**பங்காளி தேவை**

கிளிநொச்சியிலிருந்து மாங்குளத்திற்கிடையில் ரயர் மீள் நிரப்பும் தொழிற்சாலை தொடங்க இருப்பதால் பங்காளி தேவைப்படுகிறார். தொழிற்சாலை தொடங்குவதற்கு உரிய சகல சாமான்களும் கைவசம் இருப்பதால் உடனடியாக செயற்படுத்த முடியும் என்பதை அறியத்தருகிறேன். விபரங்கள் அறிவதற்கு கீழ் வரும் விலாசதாரருடன் தொடர்புகொள்ளவும் (கடிதமூலம்)

க. ஜெயபாலகணேசன்,

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

(5586)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சிவபாதம் (சிவா மாஸ்ரர்)

PGD(University of Bradford,UK), DAMGT(ABE-UK), DBK (IAB-UK), DHR(Cey), MA in Dev.Stud. (Reading)

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஓய்வு பெற்ற நிறைவேற்று அதிகாரி, கிளிநொச்சி கிளை.**



பூநகரி சித்தன்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி இல. 29 உதயநகர் கிழக்கு டிப்போ வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவருமான கணபதிப்பிள்ளை சிவபாதம் அவர்கள் 29/07/2011 அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை காமாட்சி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற இராமலிங்கச் செட்டியார் லக்சுமி தம்பதியினரின் (பெருமாள் கோவிலடி, யாழ்.) மருமகனும், கமலவேணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சேந்தினி, சந்திரிகா, மேனகா, மேலோஜினி, கமலேந்திரா (University of Peradeniya) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசன் (ஓய்வுபெற்ற நூலகர், பூநகரி பிரதேச சபை), செல்வராசா (கறுக்காய்த்தீவு), நாகேஸ்வரி (யூனியன் குளம்), லலிதாம்பிகை (கரவெட்டி), ஜெயகுணதிலகம் (குணம்- சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விக்னேஸ்வரன் (வரதா- பரந்தன்), விக்னேஸ்வரன் (விக்கி- முன்னாள் World Vision பணியாளர்) ஆகியோரின் மாமனாரும், துஷாயினி, துஷாங்கி, தேனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.29 உதயநகர் கிழக்கு டிப்போ வீதியில் இடம்பெற்று இன்று (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொலைபேசி இலக்கம்:

0773832737

0771116468

0214312609

தகவல்:

குடும்பத்தினர்.

இல. 29, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

(சி-3881)

# ஐ.தே.கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளையும் முரண்பாடுகளையும் தவிர்த்துக் கொள்வோம்

## ரணில் லண்டனிலிருந்து அறிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இல்லாத சமயத்தில் கட்சித் தலைமைத்துவத்திற்கு கட்சி பிரதித்தலைவர் கருஜயசூரியவை கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் கட்சிக்குள் ஏற்பட்டிருந்த பிளவு மேலும் உக்கிரமடைந்து கட்சி இரண்டாக பிரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த வாரம் நடப்பதற்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் லண்டன் பயணமானார். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்குமாறு கட்சி பிரதித் தலைவர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஸ அடங்கலான மாற்றுக் குழுவினர் மற்றொரு பிரதித்தலைவரான கரு ஜயசூரியவை கோரினர்.

இதன்படி கட்சித் தலைமைப் பதவியை ஏற்கத் தயார் என கரு ஜயசூரியவும் விருப்பம் தெரிவித்தார். கட்சி ஒப்படைக்கும் எந்த சவாலையும் தான் ஏற்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கட்சித் தலைமைத்துவத்தை பிடிக்க முயற்சி செய்து தோல்வியடைந்துள்ள சஜித் பிரேமதாஸ திடீரென தனது நிலைப்பாட்டை மாற்றி கருஜயசூரியவை கொண்டுவர முயற்சி எடுத்துள்ளார்.

இந்த திடீர் திருப்பத்தினால் தனது தலைமைத்துவத்திற்கு ஆபத்து ஏற்படும் என்று பயந்துள்ள ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க- கரு ஜயசூரியவை சமாளிக்கும் வகையில் லண்டனில் இருந்து நேற்று முன்தினம் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளையும் முரண்பாடுகளையும் தவிர்த்து கட்சியை ஒரே தலைமைத்துவத்தில் செயற்படுவதற்கான அதிகாரங்களை கரு ஜயசூரியவுக்கு வழங்குவதாக எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க லண்டனிலிருந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பை கரு ஜயசூரிய ஏற்றுக்கொள்வது தொடர்பாக லடனில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கிளைக் கூட்டத்தில் பேசிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்ததோடு அறிக்கையும் விடுத்துள்ளார்.

கட்சியின் பெரும்பான்மையோர் இடையே நிலவிவரும் கருத்து வேறுபாட்டை நீக்குவதற்கும் உறுப்பினர்களை ஒன்றிணைப்பதற்கும் கரு ஜயசூரியவிற்கு பாரிய கடப்பாடு உள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியில் சமாதானத்தை ஏற்படுத்தி கட்சியை ஒரே தலைமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அனுபவமுள்ளவர் கரு ஜயசூரிய எனவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

இந்த நிலையில் கட்சி பிரதித்தலைவர் கரு ஜயசூரிய திடீரென இந்தியாவுக்கு சென்றுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் கூறின. இவர் இந்தியா சென்றதற்கான காரணம் தெரியவில்லை.

(4-2)

## துணுக்காய் வலய விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

துணுக்காய் கல்வி. வலயத்தைச் சேர்ந்த விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடல் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி மாணவர்களுக்கான பயிற்சி முகாம் அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி, மாகாண மட்டப் போட்டியில் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் புதிய நிகழ்ச்சிகள் சேர்த்தல் போன்ற விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே அனைத்துப் பொறுப்பாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப்பயிப்பாளர் எஸ். ராஜேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(2-4)

## நிர்வாக தெரிவுக்கூட்டம்

(பூநகரி)

புன்னை நீராவி, உழவனூர், நாதன் குடியிருப்பில் சிரேஷ்ட பிரஜைகள் குழு நிர்வாகத் தெரிவுக்கூட்டம் அண்மையில் தருமபுரம் புன்னை நீராவி கிராமசேவை அலுவலர் எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக எஸ்.பெருமாள், உப தலைவராக சி.மயில்வாகனம், செயலாளராக சு.இந்திராதேவி, உப செயலாளராக க. வேலுப்பிள்ளை, பொருளாளராக இ.குமாரவேல் ஆகியோர் தெரிவாகினர்.

அத்துடன் நான்கு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக் கூட்டத்தில் "ஹெல்ப் ஏச் " நிறுவன பிரதிநிதி சிவாஜினி வழிநடத்தலில் வாழ்வாதாரத்திட்டத்திற்காக பத்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(2-84)

## இராசி பலன்

31.07.2011
(ஆடி 15, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பிரதமை முன்னிரவு 11.03 மணிவரை
பூசம் காலை 7.14 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், உற்றார் உறவினர்களின் வருகையுண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், தன்னம்பிக்கையுடன் பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** உன்னதமான வாழவுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், தேவையற்ற கற்பனைகளை வளர்ப்பீர்கள்.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் காண வேண்டிய நாள், பிறரது பொறுப்புக்களையும் எடுக்கும் சூழ்நிலை அமையலாம், திடீர் பயணங்களால் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், வருங்கால நலன் கருதி புதிய திட்டமொன்றை தீட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், உறவினர் வருகையுண்டு.

**துலாம்** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், தூர தேசச் செய்திகள் வந்து சேரும், உற்சாகமான செயற்பாடுகளால் காரியங்களைச் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்கள் இன்று துரிதமாக நடைபெறும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழிச்செய்திகளால் பரவசமடைவீர்கள்.

**தனுசு** செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கைமாற்று வாங்கும் சூழ்நிலை அமையலாம், தொழிலில் கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, பிரயாணங்களில் அவதானமாக இருக்க வேண்டிய நாள்.

**மகரம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், பகைவர்கள் விலகுவர், புதிய சிந்தனைகள் தோன்றும், செய் தொழிலில் உத்வேகம் காட்டுவீர்கள்.

**மீனம்** சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் சுமுகமாக முடியும், தொழில் வளர்ச்சியேற்படும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், புத்திரர்களால் நன்மையுண்டு.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### மனக்கவலைக்கு மருந்து!

" யார் தம்பி நீ? யாரைப் பார்க்க வந்திருக்கிறாய்?"

" உங்களைத்தான் பார்க்க வந்தேன்!"

" எதற்காக?"

" நீங்கள் மிகவும் மனவேதனையோடு இருக்கின்றதாக கேள்விப்பட்டேன்!"

" ஆமாம்! அந்த வேதனைக்குக் காரணம்...!"

" அதுவும் எனக்குத் தெரியும்!"

" அப்படியா?"

" ஆமாம்! அந்த உங்கள் மனவேதனை தீர ஒரு மருந்து கொடுக்கலாமென்று வந்திருக்கிறேன்!"

" மனவேதனைக்கு மருந்தா?"

" ஆமாம்! ஹோமியோபதி மருந்து! இந்தாங்க! ஒரு மரத்து விதையிலேயிருந்து தயார் செய்த மருந்து இது!""

"என்ன மரம் அது?"

"இக்னோஷியா மரம்! இதனுடைய பூர்வீகம் பிலிப்பைன்ஸ். இப்பொழுது ஐரோப்பிய நாடுகளிலேயும் இந்த மரங்கள் இருக்கின்றன!"

"அந்த மரத்துக்கும் நம்ம மனசுக்கும் என்ன சம்பந்தம்?"

"இந்த மரத்தினுடைய பழம் அப்பிள் மாதிரி இருக்கும்... உள்ளே இருக்கிற விதை கசப்பா இருக்கும்... அது தான் மனுஷனோட துயரங்களைப் போக்கி மன ஆறுதலைக் கொடுக்கிறது! மன அதிர்ச்சியைச் சரி பண்ணுகின்றது! மனக்காயத்தை ஆற்றுகின்றது!"

"உள்ளுக்குச் சாப்பிடுகிற மருந்து உடல் காயத்தை ஆற்றுகின்றது என கேள்விப்பட்டிருக்கிறேன்...! மனக் காயத்தையும் ஆற்றுமா?"

"இந்த மரத்து விதைகள் ஸ்தூல உடம்பிலே (Physical body) அதிகமாக வேலை செய்வதில்லை! மனிதனோட சூட்சும உடம்பிலே அதாவது ஆன்மாவிலே வேலை செய்யும்!"

"ஆச்சரியமாக இருக்கிறதா?"

"அந்த மரத்து விதைகளிலிருந்து தயாரான மருந்துதான் இது! தொடர்ந்து சாப்பிடுங்கள். உங்கள் மனவேதனை சரியாகப் போய்விடும்!"

"மிகவும் நன்றி! அது சரி தம்பி... என் பெயரில் உனக்கு என்ன அவ்வளவு அக்கறை?"

"சொல்லுகிறேன்! இப்பொழுது... உங்கள் மனவேதனைக்கு என்ன காரணம்...?"

"என் பெண் அவளுடன் கூட படித்த ஒரு பையனைக் கல்யாணம் செய்துகொண்டு திடீரென்று காணாமல் போய்விட்டார்! அதுதான் என் வேதனை!"

"அந்த வேதனையைக் குறைத்தால்தான்... நீங்கள் அந்த பையனை உங்கள் மாப்பிள்ளையாக ஏற்றுக்கொள்வீர்கள்... இல்லையா?"

"அதுக்காக...!"

"அதுக்காகத்தான் அந்த மருந்தை வாங்கிக்கொண்டு வந்தேன்! உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்ட அந்தப் பையன் நான்தான் மாமா!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 25 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 90 | 50 |
| தக்காளி | 25 | 60 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 40 | 80 | 40 |
| கரட் | 50 | 70 | 50 |
| பூசணி | 30 | 35 | 25 |
| புடோல் | 30 | 50 | 20 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 70 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 55 | 75 | 40 |
| பாகற்காய் | 120 | 120 | 60 |
| வெண்டிக்காய் | 40-50 | 60 | 50 |
| கரணைக்கிழங்கு | -- | 120 | 90 |
| பயற்றங்காய் | 150 | 200 | 30 |
| லீக்ஸ் | 50 | 60 | 40 |
| பீற்றூட் | -- | 30 | 25 |
| கறிமிளகாய் | 50 | 80 | 50 |
| முருங்கைக்காய் | 50 | 90 | 80 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரி தம்புள்ள | 15 | 20 | 15 |
| கீரை - 1 பிடி | 10-12 | 40 | 10 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 40 | 30 |

# கடுகதி நெடுஞ்சாலை பயன்படுத்துவது தொடர்பான விரிவான வேலைத்திட்டம்

(கொழும்பு)

தெற்கு கடுகதி நெடுஞ்சாலை பயன்படுத்துவது தொடர்பாக பொது மக்களுக்கு தெளிவு படுத்துவதற்கான விரிவான வேலைத்திட்டம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுமென்று பெருந்தெருக்கள் அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் பிறேமசிறி தெரிவித்துள்ளார்.

பொலிஸார் தற்போது சாரதிகள் மற்றும் பொது மக்களுக்கு தெளிவு படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

கடுகதி நெடுஞ்சாலைக்காக பொதுப் போக்குவரத்துச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் கூறியுள்ளார்.

கடுகதி நெடுஞ்சாலையில் பஸ் வண்டிகளை நிறுத்த முடியாது குறிப்பிட்ட பகுதியில் பஸ்ஸை நிறுத்தி மீண்டும் வீதியில் பிரவேசிக்க முடியும். பயணிகளுக்கு நெடுஞ்சாலையில் பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நெடுஞ்சாலையில் அனுமதி பெற்ற வாகனங்கள் மாத்திரமே பயணிக்க முடியும்.

அத்துடன் மணித்தியாலயத்திற்கு ஆகக் கூடுதலாக 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும்.

குறிப்பிட்ட இடங்களை மாத்திரம் சாரதிகள் பயன்படுத்த முடியும். குறிப்பிட்ட இடங்களில் திரும்புவதற்கு முற்படும் போது அதிகவேகங் காரணமாக விபத்துக்கள் இடம் பெறக்கூடும்.

விபத்து மற்றும் சட்டம் தொடர்பாக பொலிஸில் தனியான அதிவேக நெடுஞ்சாலைக்கென பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு 24 மணி நேரமும் செயற்படும்.

தெற்கு கடுகதி நெடுஞ்சாலையில் பயணிப்பதற்கு கட்டணம் அறவிடப்படுவதோடு வாகனத்தின் ரகம், பயணிக்கும் தூரம் முதலானவற்றிற்கு அமைய இது தீர்மானிக்கப்படும்.

இந்த விடயங்கள் தொடர்பான தகவல்கள் வர்த்தமானியின் மூலம் எதிர்காலத்தில் அறிவிக்கப்படவுள்ளது. (4-2)

# வெளிநாட்டுப் பணத்தை கடத்த முற்பட்டவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதானார்

வெளிநாட்டுப் பணத்தை சட்ட விரோதமாக இந்தியாவுக்கு கொண்டு செல்ல முயற்சித்த நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பாக தெரிய வருவதாவது,

அவரிடமிருந்த 2200 குவைத் டினார் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டதாக விமான நிலைய சுங்க அத்தியட்சகர் பராக்கிரம பஸ் நாயக்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்த பணம் பறிமுதல் செய்யப்பட்டதோடு குறித்த நபர் எச்சரிக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சுங்க அதிகாரிகள் மற்றும் விமான நிலைய பாதுகாப்புத் தரப்பினரால் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பயணி இந்தியாவின் சென்னை நோக்கிப் பயணிப்பதற்கு தயாராக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பணத்தின் மொத்தப் பெறுமதி இலங்கை ரூபாப்படி 8 இலட்சத்து 97 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அத்தியட்சகர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

# பிரதேச செயலகங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்யப்படும்



## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சிறுபோக நெல் கொள்வனவுக்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டுள்ள துடன் விவசாயிகள் எதிர்பார்க்கும் விலையைப் பெற்றுக் கொடுக்கவும் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நெல் விளைச்சலைக் கருத்திற் கொண்டு அரசாங்க அதிபர்கள் கோரும் போதுமானளவு நிதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொள்வனவு செய்யப்படும் நெல்லைக் களஞ்சியப்படுத்த 250 களஞ்சிய சாலைகளைத் தயார் நிலையில் வைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2011 சிறுபோக நெல் கொள்வனவு சம்பந்தமான சகல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதற்கு முன்னோடியாக நெல் கொள்வனவு தொடர்பில் எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பது சம்பந்தமாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்.

இதுவரை காலமும் நெல்கொள்வனவிற்காக அமைக்கப்படும் விசேட கொள்வனவு மத்திய நிலையத்தினூடாகவே நெல் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முறை பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் நெல் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க பிரதேச செயலகங்கள் மூலம் உரிய பகுதிகளுக்கு லொறிகள் அனுப்பப்பட்டு அதனூடாக நெல் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான பணிப்புரைகளை நெல் சந்தைப்படுத்தும் சபையின் அதிகாரிகளுக்கு அமைச்சர் வழங்கியுள்ளார்.

இந்த வகையில் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாக்கும் வகையிலேயே அமைச்சின் சகல செயற்பாடுகளும் அமையும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (4-2)

# நல்லூர் உற்சவத்தில் காலத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி

(நல்லூர்)

நல்லூர் உற்சவ காலத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களின் முதலுதவி சேவையும் அம்புலன்ஸ் சேவையும் நாள் முழுவதும் நடைபெறவுள்ளது.

இச்சேவைக்கு முதலுதவி பயிற்சி பெற்ற தொண்டர்களே ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்தோடு ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க பிரிவுக் கிளைகளிலிருந்து இச்சேவைக்கு தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2-134)

# அநுராதபுரம் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஒருவர் பலி

(கொழும்பு)

அநுராதபுரம் - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மதவாச்சி லஹமல் கொல்லாவ பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை டிப்பர் வாகனமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் அநுராதபுரம் புபுதுபுற பகுதியை சேர்ந்தவர் என தெரிவித்த பொலிஸார் டிப்பர் வாகனத்தின் சாரதியையும் கைது செய்துள்ளார். (4-2)

# இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள புன்னைநீராவி கிராமசேவகர் பிரிவில் ஹெல்ப்ஏச் நிறுவனத்தால் கண் பரிசோதனை செய்யப்பட்ட முப்பது (30) பயனாளிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அப்பகுதி கிராம சேவை யாளரினால் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு தமக் குரிய மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளார்கள்.(4-2-84)



பருத்தித்துறை வியாபாரி மூலை இராவளைப் பகுதியில் நேற்றுக் காலை வீடொன்றில் 5 அடி நீளமுடைய வெள்ளை நாகம் ஒன்று பிடிக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மணியம்தோட்டம் மக்களாகிய நாம் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது எமது கிராமத்துக்கு மீள்குடியேற உதவிபுரிந்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**கே. என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும் எமக்கு பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்







சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்)அவர்களுக்கும் , யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்களுக்கும், மேலும் எமது கிராமத்தின் குடிநீர், மின்சாரம், வீதிகள், வீட்டுத்திட்டம், கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு நிதியுதவி பெறுவதற்கும் எமது கோரிக்கைகளை கௌரவ அமைச்சரிடம் கையளித்து எமது கிராமம் வளர்ச்சியடைவதற்கு முன்னின்று உழைத்த எமது நல்லூர் பிரதேச அமைப்பாளரும் (E.P.D.P) நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான அம்பலம் இரவீந்திரதாசன் (J.P) அவர்களையும் எமது கிராம மக்கள் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கமும்
மணியம்தோட்டம் வாழ் மக்களும்.

(5596)



பூநகரி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை காரணமாக பூநகரி வாடியடி கமநல சேவை நிலையத்திற்கு முன்பாகவுள்ள புதுக் கிணற்றை கறுக்காய்தீவு கமக்கார அமைப்பினர் துப்புரவு செய்து நீரை இறைக்கும் பணியில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். (படம்:–பூநகரிச் செய்தியாளர்)

# புன்னைநீராவி–பிரமந்தனாறு வீதியை புனரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த புன்னை நீராவி பிரமந்தனாறு வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்குறித்த வீதியானது 3 கிலோ மீற்றர் நீளமுள்ள வீதியாகவும் அதில் ஒரு கிலோ மீற்றர் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு 2 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாமையால் பயணம் செய்யமுடியாதுள்ளது.

பிரமந்தன் மகா வித்தியாலயம் பிரமந்தன்குளம், விஸ்வமடு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மற்றும் ஆலயங்களுக்கு இவ்வீதியாலேயே பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியைப் புனரமைப்புச் செய்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4–3)

# பிரமந்தனாறு–கல்லாறு வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பிரமந்தனாறு-கல்லாறு வீதியானது புனரமைப்புக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டும் புனரமைக்கப்படாமல் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ் வீதியானது 3 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதியாகவும் 6 மாதங்களுக்கு முன் வீதி ஒப்பந்தகாரரால் வீதி புனரமைப்பிற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டு வீதியோரத்தில் கிரவல் மண் பறிக்கப்பட்ட நிலையிலும் இன்று வரை புனரமைக்கப்படவில்லை.

சுண்டிக்குளம் கடற்கரைக்குச் செல்லும் கடற்தொழிலாளர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் இவ்வீதியூடாக பயணிப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதி புனரமைப்பு வேலைகளை துரிதமாக மேற்கொண்டு போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4–3)

# பொற்பதி சென்பீற்றர்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் சாகச நிகழ்ச்சி

வடமராட்சி கிழக்கின் பொற்பதி கிராமத்தில் புனித இராயப்பு ஆலய பெருநாளை முன்னிட்டு பொற்பதி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் மாபெரும் சாகச செயல்கள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பொற்பதி சென் பீற்றர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சான்டோ ஆசிரியர் ஜோன் சில்வா ரவியால் பயிற்சி வழங்கப்பட்ட சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 5 இற்கு மேற்பட்ட வீரர்களின் வீரதீர செயல்கள் இங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4–64)

# நக்கிள்ஸ் வனத்தின் ஒருபகுதி பிரதேசவாசிகளால் அழிப்பு

(கொழும்பு)

நக்கிள்ஸ் வனத்திற்குச் சொந்தமான ரத்தோட்டை மவுஸ்ஸாவை பிரதேசத்தின் ஒரு பகுதி சட்டவிரோதமான முறையில் வெளியாக்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பு இவ்வாறு வெளியாக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. குறித்த பகுதியில் மரக்கறிச் செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் மாத்தளை மாவட்ட செயலாளர் கே.எச்.ஏ மீகஷீஸ் முல்லவிடம் வினவியபோது,

குறித்த இடத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (4–2)

# நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதிகளில் விபத்துக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதிகளுக்கு அண்மையில் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு குறிப்பிடுகிறது.

இதற்கமைய அந்தத் துறையில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களை தெளிவுபடுத்தும் விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் கைத்தொழில் பரிசோதனை பிரிவின் ஊடாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவது தொடர்பிலும் இந்த திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(4–2)

### குவைத் நாட்டின் நிதியுதவியுடன்

# இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு 2 ஆயிரம் வீடுகள் அமைக்க முஸ்தீபு

(கொழும்பு)

கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் முயற்சியால் குவைத் நாட்டின் நிதியுதவி மூலம் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு 2 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மற்றும் குவைத்தின் ஒருங்கிணைப்பு நிவாரண சேவைகள் அமைப்பின் தலைவர் பதர் ஷ்ரூக் இருவரும் இதில் கைச்சாத்திட்டனர்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் 2 இலட்சத்து 31 ஆயிரம் டொலர் செலவில் 42 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (4–2)

# எச்.ஐ.வி. தொற்றை தடுப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை

வெளிநாட்டு நிதியுதவியில் அடுத்த 5 வருடங்களில் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வரும் 4 ஆயிரத்து 800 பேருக்கு எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் வைரஸ் உடலில் தொற்றுவதை தடுப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என மருத்துவர் லிலானி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 40 ஆயிரம் பேர் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன் இவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு நகரில் வசித்து வருகின்றனர் என தெரிவித்த அவர் வருடாந்தம் சுமார் ஆயிரம் பாலியல் தொழிலாளர்கள் தமது உடலில் எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் வைரஸ் தொற்றியுள்ளதா என்பதை பரிசோதிக்க தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு செல்வதாக கூறியுள்ளார்.

எயிட்ஸ் வைரஸ் உடலில் தொற்றியுள்ளவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்ந்தும் பாலியல் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் அவர்களுடன் உறவு வைத்துக் கொள்ளும் பெரும்பாலானவர்களுக்கு எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொற்றும் ஆபத்து உள்ளது.

இதன் காரணமாக இவர்களுக்கு பாலியல் தொழில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் லிலானி ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (4–2)



# தமிழ் மக்களின் ஆணைக்கு விரோதமாக த.தே.கூட்டமைப்பு செயற்படக் கூடாது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 23.07.2011 அன்று தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளை தமிழ்மக்கள் நிராகரித்துள்ளதன்மூலம் தமிழ்த்தேசத்தின் தனித்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் தமிழ்த்தேசம் வேறு சிங்களதேசம் வேறு என்பதனையும் மீளவும் வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முழு விபரம் வருமாறு,

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இரண்டு தேசங்களும் வேறுபட்டது என்ற அடிப்படையிலேயே சர்வதேச சமூகம் தமிழ் மக்களது இனப்பிரச்சினையை அணுக வேண்டும் என்பதே தமிழ்மக்களது விருப்பம் என்பதனையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அனைத்துத் தமிழ்மக்களும் ஒன்றிணைந்து ஒற்றுமையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால்,

♦ இலங்கை அரசு மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு குற்றவா ளிகள் தண்டிக்கப்படல்

♦ தமிழ்மக்களது சுயநிர்ணய உரிமை அடிப் படையிலான அரசியல்தீர்வை அடைதல்

♦ தமிழர் தாயகத்தில் இடம்பெறும் நிலப் பறிப்புக்கள், இராணுவ மயமாக்கல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மக்கள் குடியிருப்புக்களில் இருந்து படையினர் வெளியேறல்

போன்ற நிலைப்பாடுகளை ஒருமித்த குரலில் சர்வதேச சமூகத்திற்குக் கூறுவதாக அமையும் என்று தமிழ்மக்கள் உறுதியாக நம்பியதனால் கடுமையான இராணுவ நெருக்கடிகளையும் வாழ்வியல் நெருக்கடிகளையும் சந்தித்தவாறு ஒற்றுமையாக ஓரணியில் திரண்டு ஏனைய பேரினவாதக் கட்சிகளையும் நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர்.

ஆனால் கூட்டமைப்பினர் தாம் கொள்கைகளில் உறுதியாக இருப்பதுபோன்று வார்த்தைகளில் மட்டும் வீர வசனங்களைப் பேசி தமிழ்மக்களை நம்பவைத்து வாக்குகளைப் பெற்றுக் கொண்டனர். தேர்தலின் பின்னர் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தி தமிழ்மக்களது அரசியல் அபிலாசைகளுக்கு முற்றிலும் எதிராகச் செயற்பட்டு வருகின்றனர்.

தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாள் 24.07.2011 அன்று புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் உரையாற்றிய த.தே.கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் புலம் பெயர் தமிழ்மக்களை சோர்வடையச் செய்து அவர்களால் போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை கைவிடச் செய்யும் வகையில் கருத்துரைத்துள்ளதுடன் சிங்கள மக்கள் தருவதற்குத் தயாராக உள்ளதையே அரசியல் தீர்வாக தமிழர்கள் முன் வைக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டுமென தமிழ்மக்கள் தமக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்று கூறியுள்ளார்.

தேர்தலுக்குப் பின்னர் இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவரும் சுயநிர்ணய உரிமை, தமிழ்த்தேசம் ஆகிய அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டு கருத்துக்களை வெளியிட்டுள்ளமையை முக்கியமாகக் கருத்திற்கொள்ளவேண்டும். அத்துடன் இவர்களது கருத்துக்களை தொகுத்து நோக்கும்போது தமிழ்மக்களால் ஏகோபித்த அடிப்படையில் கடந்த 20 ஆண்டுகளாக நிராகரிக்கப்பட்டு வந்த 13ஆம் திருத்தச் சட்டத்தின்மூலம் கொண்டுவரப்பட்டமாகாண சபையை அங்கீகரித்து தமிழர்களை சிறுபான்மையினம் என்று ஏற்றுக்கொண்டு ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள் அடிமைகளாக வாழும் நிலைக்குள் தள்ளப்போகின்றனர் என்பதே உண்மையாகும்.

அரசாங்கத்துடனும் சர்வதேச சமூகத்தினருடனும் தமிழ்மக்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைக்கு இரா. சம்பந்தன் ,எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவருமே தலைமை தாங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்த்தேசத்தின் இறைமைக்கான போராட்டத்தில் எமது மக்களும் இளைஞர்களும் செய்த தியாகங்களையும் சந்தித்த இழப்புக்களையும் விலைபேசும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. அதாவது இனப்படுகொலை புரிந்தவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணையை தமிழ்மக்கள் விரும்பவில்லை என்றும் சிங்கள மக்கள் தருவதற்குத் தயாராக உள்ள எந்தத் தீர்வையும் பெற்றுக் கொண்டு வாழத்தயாராக உள்ளனர் என்ற செய்தியே கூட்டமைப்புத் தலைவர்களின் கருத்துக்களின் தொகுப்பாக சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்களை நிரந்தர அடிமைகளாக்கும் வகையில் தமிழ்மக்களது நலன்களுக்கு எதிரான மேற்படி தலைவர்களது கருத்துக்களை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது. புலம்பெயர் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்துடன் இணைந்து இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ள போர்க்குற்றங்களை விசாரிப்பதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை முறியடித்து அரசாங்கத்தைக் காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் சதி முயற்சியை தாயகத்திலும் புலத்திலும் வாழும் தமிழ்மக்கள் புரிந்து கொண்டு இவர்களது சதியை முறியடித்து விடுதலை நோக்கிய பாதையில் உறுதியாகப் பயணிக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

அத்துடன் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியும் தமிழ் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்கள் என்ற அரசியல் தீர்வை அடைவதற்காகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தாயக மக்களுடனும் புலம்பெயர் தமிழ் மக்களுடனும் இணைந்து தொடர்ச்சியாக ஜனநாயகள வழியில் செயற்படும் என்றும் உறுதியளிக்கின்றது. (ந)

# ப.ம.க.கட்சியினர் என்னை அழைத்தால் அதில் இணைவது குறித்து ஆலோசிப்பேன்

## தொல்.திருமாவளவன் சூளுரை

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கக் கோரி விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கையெழுத்தியக்கம் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் சென்னை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் நீதிமன்ற ஊழியர்களிடம் கையெழுத்து வாங்கிய திருமாவளவன் பின்னர் செய்தியாளர்களிடையே உரையாற்றுகையில்,

தி.மு.க. , அ.தி.முக. ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர்த்து மூன்றாவது அணியை உருவாக்குவது தொடர்பாக பத்து ஆண்டுகளுக்கு முன்பே நான் பேசியிருக்கின்றேன்.

2009 ஆம் ஆண்டு ஈழப் பிரச்சினை வெடித்த போது அரசியல் கூட்டணி அரசியலில் இதை பொருத்தக் கூடாது. இந்த இரண்டு கட்சிகள் தவிர்த்து மூன்றாவது அணியாக ஈழ ஆதரவாளர்கள் போட்டியிட வேண்டும் என்றேன். அப்போது என் கருத்தை யாரும் கண்டு கொள்ளவில்லை. வைகோவிடமும் இராமதாசிடமும் நான் இது பற்றி கூறினேன். கடைசியில் அது நடக்காமல் ஆளுக்கொரு அணியில் பிரிந்து போட்டியிட்டோம்.

இப்போது அனுபவத்தின் அடிப்படையில் இராமதாஸ் அ.தி.மு.க., தி.மு.க. வுடன் இனி கூட்டணி இல்லை என்று அறிவித்திருக்கிறார். தனி அணி அமைப்போம் என்றிருக்கிறார். இது நல்ல விடயம். மருத்துவர் இராமதாஸ் அவர்களை அழைத்தால் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி ப.ம.க. கூட்டணியில் இணைவது பற்றி முடிவெடுப்போம் என்றார் திருமாவளவன். (4-2)

# இலங்கைத் தமிழ் விஞ்ஞானிக்கு அமெரிக்காவில் உயர் விருது!



நியூசிலாந்தில் வசிக்கின்ற இலங்கைத்தமிழ் விஞ்ஞானி ஒருவருக்கு அதியுயர் விருது ஒன்றை வழங்கிக் கௌரவித்துள்ளது. அமெரிக்க பேராசிரியர் வேல்முருகு ரவி ரவீந்திரன் என்பவரே இக்கௌரவத்தைப் பெற்றுள்ளார். இவர் மிருகங்கள், பறவைகள் தொடர்பாக ஆய்வுகள் நடத்தி வருகின்ற விஞ்ஞானிகளில் முக்கியமானவராவார்.

கோழிகளுக்கான ஊட்டச்சத்து உணவு தயாரிப்புத் துறையில் பெரிய நிபுணர். ரவீந்திரனுக்கு கோழிகளுக்கான ஊட்டச்சத்து ஆராய்ச்சி விருதை உணவூட்டலுக்கான அமெரிக்க கைத்தொழில் சங்கம் வழங்கியுள்ளது.

இவ்விருதைப் பெற்று இருக்கின்ற வட அமெரிக்கர் அல்லாத முதலாவது நபர் இவரே ஆவார். ரவீந்திரன் 1988 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு நியூசிலாந்து சென்றார். தற்போது மசி பல்கலைக்கழகத்தில் உயர் பதவி வகித்து வருகின்றார்.

இவர் இலங்கை, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஆய்வுப் பணிகள் பலவும் மேற்கொண்டுள்ளார். (4-2)

# மஹோற்சவம்

(மருதங்கேணி)

வல்வெட்டித்துறை ஆதி வைரவர் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (2-35)

# மீள்குடியேறியுள்ள பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள சமுர்த்தி திட்டம்

(கொழும்பு)

வடக்கில் மீள் குடியேற்றம் பூர்த்தியான சகல பிரதேசங்களிலும் சமுர்த்தி திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட போதே வடக்கு மாவட்டச் செயலாளர்களிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெற்றுவரும் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் மாவட்ட நிர்வாக நடவடிக்கைகளில் எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்நிகழ்வின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளதுடன் குடும்ப பொருளாதார திட்டமான திவி நெகும, கம நெகும இ கிராமிய எழுச்சித் திட்டம் தொடர்பிலும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கில் குறிப்பாக வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சமுர்த்தி திட்டத்தினை விரைவாக ஆரம்பித்து அதன் பயன்களை மக்கள் அனுபவிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார். நேற்று முன்தினம் நடைபெற்ற மாநட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன உட்பட அபிவிருத்தியுடன் தொடர்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்மாநாடு கொழும்பு 7 இல் உள்ள இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றதுடன் நாடளாவிய சகல மாவட்டச் செயலாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள் உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம்.**

**இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
    1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
    2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காணப்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத் அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமட்ங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth& stability
1950 - 2010

(ஐ/3874)

# போருக்குப் பின்னர் இலங்கையர்களது காயங்கள் குணமடைந்து வருகின்றன

(கொழும்பு)

இலங்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் இலங்கை அவற்றிக்கு பதிலளிப்பதை விடுத்து தம் தவறை மறைப்பதற்காக பல்வேறு மட்டங்களில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வருகிறது.

மனித உரிமை மீறல்களுக்கும் போர்க்குற்றங்களுக்கும் பொறுப்புக் கூறுவதை தட்டிக் கழித்து நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு சர்வதேசம் தடையாக இருப்பதாக அரசாங்கம் குற்றம் சாட்டி வருகிறது.

இந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சனல் 4 தொலைக்காட்சி ஆகியவற்றுக்கு எதிராக இலங்கையின் பாடகர் ருக்ஷான் பெரோ சேம்ஒன்யு என்ற தலைப்பில் பாடல் ஒன்றை இயற்றியுள்ளார்.

போருக்குப் பின்னர் அனைத்து இலங்கையர்களும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். அவர்களது அனைத்து காயங்களும் குணமடைந்து வருகின்றது.

மற்றும் ஐ.நா.வும் சனல் 4 தொலைக்காட்சியும் நாட்டை பிளவுபடுத்த முற்படும் பிரிவினைவாதிகளுடன் இணைந்து செயற்படுகின்றன என்ற தொனியில் குறித்த பாடல் அமைந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இலங்கை சர்வதேசத்தின் மத்தியில் மேலும் கேலிக்குரிய ஒன்றாக மாறிவருகின்றது என்பது தெட்டத்தெளிவு. (4-2)

# பொதுநலவாய அமைப்புடன் தென்சூடானை இணைக்க வேண்டாம்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



நாடு கடந்த தமிழீழ அரசை தென் சூடான் அங்கீகரிக்கக்கூடாது என்று இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார். இவர் பிரித்தானியாவின் தலைநகர் லண்டனில் தற்போது உள்ளார். இவர் அங்கு பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலஸ்டெயர் பேர்ட் ஆகியோரை பொதுநலவாய நாடாளுமன்றசங்க கூட்டத்தில் சந்தித்து உரையாடியுள்ளார்.

புதிதாக தோற்றம் பெற்று உள்ள தென்சூடானை பொதுநலவாய அமைப்பில் சேர்த்துக் கொள்கின்றமைக்கு இச்சந்திப்பின் போது பிரிட்டன் அமைச்சர்கள் பேராதரவை வெளிப்படுத்தினர்.

ஆனால் இலங்கையை இறைமை உடைய நாடாக அங்கீகரிக்கின்ற பட்சத்தில் மாத்திரமே பொதுநலவாய அமைப்பில் தென்சூடான் சேர முடியும் என்று ரணில் கூறியுள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு கடந்த தமிழீழ அரசுக்கும் தென் சூடானுக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றன. எவருக்கும் எவருடனும் தொடர்பைப் பேண முடியும். ஆனால் நாடு கடந்த தமிழீழ அரசை தென்சூடான் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கக்கூடாது என்றார். (4-2)

## பருத்தித்துறை மக்கள் வங்கி

# "பாதை" என்னும் நடைபவனிக்கு 5 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா வழங்கியது

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை நிறுவும் நோக்குடனும் ஆண்,பெண் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை நவீன வசதிகளுடன் தெல்லிப்பளை வைத்தியசாலையில் நிறுவும் நோக்குடனும் நிதி திரட்டும் பாத யாத்திரை அண்மையில் நடைபெற்றது.

இதன் இறுதிநாள் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி புதன்கிழமை சக்கோட்டை மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை முகாமையாளரும் உழியர்களும் இணைந்து 5 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா நிதியை காசோலையாக நிதி சேகரிப் பவர்களிடம் கையளித்துள்ளனர். (4-35)

# கிழக்கு மாவட்டத்தில் ஈரானிய அரசினால் 170 மில்லியன் ரூபா செலவில் வீடமைப்பு

ஆரையம்பதி- காங்கேயனோடை கிராமத்தில் ஈரான் இஸ்லாமிய குடியரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் பிரதமர் டி.எம். ஜயரட்ணவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு 170 மில்லியன் ரூபாவை ஈரான் இஸ்லாமிய குடியரசு வழங்கியுள்ளது. இக்கிராமத்தில் மொத்தமாக 70 வீடுகளும்- பள்ளிவாசல்- சுகாதார நிலையம்- விளையாட்டு மைதானம் -சிறுவர் பூங்கா போன்றவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வீட்டுத் திட்டத்தினுடைய வீதிகளை அமைப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ - 230 இலட்சம் ரூபாவும்- உள்ளக வீதிகளை அமைப்பதற்கு சுமார் 200 இலட்சம் ரூபாவும் - இதற்கான மின்விநியோகத்திற்கு சுமார் 65 இலட்சம் ரூபாவும் வழங்கியுள்ளார்.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் வேண்டுகோளின் பேரில் அமைக்கப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டப் பணிகளை பிரதியமைச்சர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். (4-2)

# ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஆடைத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு

வவுனியா இராசேந்திரகுளத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள தனியாருக்கு சொந்தமான காணியில் இத் தாலி நாட்டு முதலீட்டு ஆடைத் தொழிற்சாலைக்குரிய அடிக்கல் நாட்டும் வைபம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கொழும்பிலுள்ள இத்தாலி நாட்டு உயர்ஸ்தானிகர், மேலதிக அரசாங்க அதிபர், தொழிற்சாலையின் நிர்வாக தலைவர், பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட உயர் அதிகாரிகள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இந்த தொழிற்சாலை அமைக்கப்படுவதன் மூலம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஒரு ஆடைத் தொழிற்சாலை ஓமந்தையில் நிர்மாணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இது தொடர்பான கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்படுமென அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

வடக்கே யுத்தமற்ற சூழல் நிலவுவதினால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் பாரிய முதலீட்டு திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுமதியுடன் இந்த திட்டங்கள் யாவும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்தில் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு பலர் தொழில்வாய்ப்பை இழந்திருந்தனர். இவர்கள் இந்த தொழிற்சாலையில் இணைந்து கொள்ள முன்னுரிமை அளிக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. (4-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வண்ணார் பண்ணை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட் கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (2-4)


## திருமறைக் கலாமன்றம்

## நாடகப்பயிலகம்

**விண்ணப்பம் கோரல்:-** எமது மன்றத்தின் நாடகப் பயிலகத்தால் வருடாந்தம் நடத் தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறியின் புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும், நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப்பயிற்சி நெறி அமையும். பயில விரும்புவோர் யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி 12. 08. 2011 வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :021 222 2393

பிரதி இயக்குநர்,
திருமறைக் கலாமன்றம்.

(ரீ-3858)



## நன்றிகள் ... நன்றிகள்... நெடுந்தீவு மக்களுக்கு



நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களை அமோக வெற்றி பெறவைத்து, இப்பிரதேசத்தின் அபிவிருத்தி முதல் கொண்டு சகல விடயங்களையும் ஒளிமயமாக மிளிர வைக்க, எம் தேசத் தலைவர் தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களைப் பலப்படுத்திய எம் உறவுகளுக்கு நன்றிகள் நன்றிகள்.




*"சொல்வதை செய்வோம் செய்வதை சொல்வோம்"*

த.ரஜீவ்
இணைப்பாளர், நெடுந்நீவு.
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி.

[5591]

# மனதை பிரயோகித்தல்



## ஆன்மீகம் 05

உங்கள் மனம் ஆனந்தமாக இருந்தால் நீங்கள் மனம் வேண்டாமென்று கூறுவீர்களா? பரவசத்திற்கான வழியாக மனம் இருந்தால் அதை விட்டுவிட விரும்புவீர்களா? மனதைப் படிக்கல்லாக இல்லாமல், தடைக் கல்லாகக் காண்பதால்தான் அதை இழக்க விரும்புகிறீர்கள். மனம் தடையல்ல, அது பிரம்மாண்டமான ஒரு வாய்ப்பாக உள்ளது. மனதின் அடிப்படை இயல்பைப் புரிந்து கொள்ளாமலும், அதை உபயோகிக்கத் தெரியாமலும் கையாளுவதால்தான் இந்தப் பிரச்சனை ஏற்படுகிறது.

மனதின் மாபெரும் பிரச்சனைகளுள் ஒன்று மனிதனின் குழந்தைப் பருவம் முதலே எது சரி எது தவறு போன்ற விடயங்கள் அவன் மனதினுள் சுமத்தப்பட்டு வந்துள்ளன. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் இது நல்லது இது கெட்டது என்று போதித்து விட்டனர். நல்லது கெட்டது என்பவை வலிமையான அடையாளங்கள். நல்லது என்று எண்ணுவதில் நீங்கள் வலிமையான அடையாளம் கொள்வீர்கள். கெட்டது என்று நினைப்பதிலிருந்து இயல்பாகவே விலக்கப்படுவீர்கள். ஒன்றுடன் ஈர்க்கப்படுவதும் வேறொன்றுடன் வெறுப்பு கொள்வதுமே, அடையாளம் கொள்வதின் அடிப்படையாக உள்ளது.

நீங்கள் எதனுடனாவது வெறுப்பு கொண்டிருந்தால் அதுவே உங்கள் மனதை ஆதிக்கம் செலுத்துகிறது. மனதின் இயல்பு இப்படி இருக்கிறது. ஏதோ ஒன்று வேண்டாம் என்று கூறினால் அதுதான் மனதில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மனதில் கழித்தலும், வகுத்தலும் இல்லை. கூட்டலும், பெருக்கலும்தான் இருக்கிறது. கட்டாயத்தினால் எந்த ஒன்றையும் மனதை விட்டுவிலக்கி வைக்க முடியாது. இதை உணருவதற்கு ஞானமடைய வேண்டிய அவசியமில்லை. ஒரு நிமிடம் கண்களை மூடி உங்கள் மனதை உற்று நோக்கினால் கட்டாயத்தினால் எதையும் செய்ய முடியாது என்பதை அறிய முடியும். நல்லது, தீயது என்று பிரித்து தீயவற்றை நினைக்கக்கூடாது என்று கூறினால் முழு நேரமும் மனதில் தீயவற்றின் நினைவுதான் இருக்கிறது. இதுதான் மனதின் இயல்பு.

ஒன்றை நல்லது என்றும் வேறொன்றை கெட்டது என்றும் அடையாளப்படுத்திய அந்தக்கணமே நல்லது என்று அடையாளம் கண்டதுடன் ஒன்றிப்போவதும், கெட்டது என்று அடையாளம் கண்டதுடன் விலகிப்போவதும் இயல்பாக நடக்கிறது. எல்லாவற்றுடனும் பாகுபாடு இருந்தால், பார்வையின் மூலம் மட்டுமே ஈடுபாட்டை வெளிப்படுத்த முடியும், இல்லையா? ஈடுபாட்டுடன் ஆகாயத்தைப் பார்க்க முடியும். ஒவ்வொரு உயிரையும் ஈடுபாட்டுடன் பார்க்க முடியும். கண்களை மூடிய நிலையிலும் ஈடுபாட்டுடன் இருக்க முடியும். ஈடுபாடு என்பது செயல் அல்ல. வாழ்க்கையுடன் கொண்டுள்ள ஒரு இசைவுத் தன்மை. அதாவது நீங்கள் வாழ்க்கையின் நிகழ்வுகளோடு இசைவு கொள்கிறீர்கள். நீங்கள் எதனோடாவது அடையாளம் கொண்டால் வாழ்வின் நிகழ்வுகளோடு இசைவற்றவர்களாக ஆகிவிடுவீர்கள். விருப்பமானவற்றுடன்தான் இசைவோடு இருக்கிறீர்கள். மற்றவற்றுடன் இசைவாக இருப்பதில்லை. இந்த விருப்பமின்மையும், இசைவின்மையும்தான் மனிதரின் உயிரோட்டத்தை செதில் செதில்களாக பெயர்த்தெடுத்து விடுகிறது. கவனித்துப் பாருங்கள், உங்களுக்கு வயதாக வயதாக உயிரோட்டம் குறைந்து போய்விட்டது, இல்லையா? (பங்கேற்பாளரிடமிருந்து மறுமொழி இல்லை) அது குறைந்துவிட்டது. நிஜமாகவே குறைந்துதான் போய்விட்டது. (அனைவரும் சிரிக்கின்றனர்.)

நம் வயது ஏறும்போது உடல் வலிமை குறைந்து போகலாம். ஆனால் உயிர்த்துடிப்பு குறையத் தேவையில்லை. 100 வயது ஆகும் போதும், ஒரு குழந்தையைப் போன்ற உயிர்த்துடிப்புடன் இருக்க முடியும். ஆனால் சிறிது சிறிதாக தற்கொலை செய்து கொள்வதால் உயிர்த்தன்மை குறைந்து கொண்டே போகிறது. சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அதில் ஈடுபாடு காட்டுவது, தற்கொலை செய்வதைப் போன்றது.

ஈடுபாடு என்றால் வெளிப்படையாகச் செயல் செய்வது என்பதல்ல. வாழ்க்கையுடன் உள்ள உங்கள் விருப்பம்தான் ஈடுபாடு என்பது. வாழ்வின் மீது விருப்பமில்லையானால் வாழ்க்கை துன்பமாகிவிடும். விருப்பத்துடன் எதைச் செய்தாலும் அது சொர்க்கமாக இருக்கும். விருப்பமின்றிச் செய்தால் அது நரகம்தான். மகத்தான காதல் உறவு கூட விருப்பமில்லாமல் நிகழும் போது பலாத்காரமாகி விடுகிறது இல்லையா? விருப்பம், விருப்பமின்மை போன்ற காரணங்களாலேயே அருமையாகக் கருதப்படும் விடயங்கள் கூட சகித்துக் கொள்ள முடியாத விடயங்களாகின்றன.

உங்கள் மனம் துயரக் கூடமா அல்லது அற்புதமா என்பது, உங்கள் வாழ்க்கை நிகழ்வுகளை முழு விருப்பத்துடன் அனுமதிக்கிறீர்களா அல்லது விருப்பமின்றி அனுமதிக்கிறீர்களா என்பதைப் பொறுத்துத்தான் உள்ளது. உங்கள் வாழ்வின் தன்மையுடன் இணக்கமாக இருக்கிறீர்களா அல்லது வாழ்க்கை உங்களை நிர்ப்பந்திப்பதாக நினைக்கிறீர்களா என்பதுதான் கேள்வி. வாழ்க்கையால் நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டால், மனம் என்பது துயரமான ஒன்றாக இருக்கும் வாழ்க்கையோடு மிக நெருங்கிய உறவிலிருந்தால் உயிர்த்தன்மை பரவசம் மிகுந்ததாக இருக்கும். உங்கள் மனமும் பரவசமாக இருக்கும். குறிப்பிட்ட சிலவற்றோடு மட்டும் அடையாளம் கொள்ளுவதால் விடங்களைத் தெரிவு செய்து ஈடுபாடு கொள்கிறீர்கள். நீங்கள் அடையாளம் கொள்ளாத மற்றைய விடயங்கள் நிகழும்போது வாழக்கை நிர்ப்பந்திப்பதாக உணருகிறீர்கள். அப்படியானால் துயரம் இயல்பாகிவிடும். வேறு வழியே இல்லை.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# என் படைப்புக்குள் ஒளிந்துகொண்டிருக்கும் நான் 03

ரஜுலா கப்பலில் எங்கள் அறுக்குளா கருவாடு கட்டுக்கள் ஏற்பட்டன. அறுக்குளா கருவாடு கட்டின் மேல் அதிக பாரம் ஏற்படுமானால் அறுக்குளா கருவாடு நொறுங்கி விடும். அதனால் மற்ற சரக்குகளுக்கு மேல் எங்கள் அறுக்குளா கட்டுக்கள் ஏற்றப்பட்டன. கப்பல் கொழும்புத் துறைமுகம் நோக்கி புறப்பட்டது. நடுக்கடலில் வைத்து அதிக பாரத்தால் கப்பல் மூழ்கிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டதால் கப்பலில் மேல் பகுதியில் இருந்த சரக்குகள் கடலில் வீசப்பட்டன. இந்தத் தகவலை சொல்வதற்காக கொழும்பிலிருந்து புறப்பட்டு வந்தவரிடமிருந்து தகப்பனார் செய்தி தெரிந்ததும் தகப்பனாரின் கண்ணில் இருட்டுப் புகுந்தது. அப்படியே உட்கார்ந்து விட்டார். வாழ்க்கை நொடிந்து போன இருப்பு. தகப்பனார் சில சொத்துக்களை விற்று துறையிலுள்ள சிறு வியாபாரிகளின் செல்லை (கடன்) அடைத்தார். அத்தோடு வியாபார ரீதியாக தகர்ந்துவிட்டதால் மனம் உடைந்து போனார். இருந்தாலும் கடலில் வீசப்பட்ட சரக்குகளுக்கு கமிஷன் கடைக்காரர் உறுதி தந்தபடி இன்சூரன்ஸ் பணம் கிடைத்ததும் தந்து விடுவார் என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையும் பொய்த்துப் போனது. இன்சூரன்ஸ் தொகையை கமிஷன் கடைக்காரர் பெற்றுக் கொண்ட செய்தி கேள்விப்பட்டு தகப்பனார் எவ்வளவோ மன்றாடி கேட்டும் ஒரு சல்லிக் காசுகூட கொடுக்கவில்லை. வெந்து நீறும் இந்த அனுபவக் கதைதான் துறைமுகம் நாவல். ஒரு கிராமத்தைப் பொருளாதார ரீதியாக தகர்க்கப்பட்டதன் உண்மை வரலாறு அடங்கியது. நாவலில் புதுக்குரலாக வரும் காசிம் என்ற கதாபாத்திரம் நானேதான். காசிமுக்கு ஏற்படும் சில நெருக்கடிகள் என் சகோதரர் ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவங்களாகும். அவற்றை என்னுடைய அனுபவங்களாக மாற்றிய எதார்த்தத்துடன் கற்பனையும்

> “கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”

கலந்து ஒரு கலை வடிவமாக வார்த்து எடுத்தேன். கவுரியல், யூசுப் முதலாளி, இவர்கள் எல்லாம் வாழ்ந்திருந்த நிஜ கதாபாத்திரங்கள்.

‘ஒரு கடலோர கிராமத்தின் கதை’ முதல் நாவலாக வெளிவந்தாலும் முதலில் எழுதிய நாவல் கூனன் தோப்பு. எழுதும்போது எனக்கு வயது 22. எங்கள் ஊரை ஒட்டிய கேரளா எல்லைப் பகுதியிலுள்ள கடலோரக்கிராமமான “பூவாரில்” நடந்த ஒரு வகுப்பு மோதலை நேரில் பார்த்தேன். அது ஒரு மனித வேட்டையாக இருந்தது. மனம் பொறுக்காமல் ஒரு ஆவேச உந்துதலால் பார்த்ததை உடனே எழுதினேன். எழுதியதை, சில நண்பர்களிடம் காட்டினேன். வாசித்த நண்பர்கள் அதை நாவல் என்றார்கள். அதைப் பத்திரிகையில் வெளியிட எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. கையாண்ட விடயம் வகுப்புக் கலவரமானதால் வெளியிட அன்று தயங்கினார்கள். நண்பர்கள் சொன்ன பிறகுதான் நான் எழுதியது நாவல் என்று தெரிந்து கொண்டேன். அன்று என்னை அறியாமலேயே நான் எழுதியதற்கு ஒரு நாவல் வடிவம் கிடைத்தது. என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. நாவலை வெளியிட, யாரும் முன் வராததால் அதை அப்படியே சுருட்டிக் கட்டிப் போட்டேன். மறந்தும் விட்டேன். முதல் நாவலும் இரண்டாவது நாவலான துறைமுகமும் தமிழ் வாசகர் மத்தியில் பேசப்பட்ட துணிச்சலில், ஏறத்தாழ 28 ஆண்டுகளுக்குப்பின், 1993இல் நானே தூசு தட்டி நூலாக வெளியிட்டேன். அந்த ஆண்டில் அந்த நூலுக்கு தமிழக அரசுப் பரிசு கிடைத்தது. அதன் மலையாள மொழி பெயர்ப்புக்கு சாகித்ய அக்கடமி விருதும் கிடைத்தது. ஆங்கில மொழி பெயர்ப்பும் வெளிவந்துள்ளது.

ஒரு சிறு வதந்தியால் கடற்கரை கிராமத்தில் வாழும் இரு சமுதாயத்தினரிடையே நடக்கும் மோதலும் அதனால் ஏழை எளிய மக்களின் அவதியும் உயிர் சேதங்களும் அதில் சொல்லப்படுகின்றன. எங்கள் கிராமத்திலிருந்து கொழும்பிற்குப் பிழைப்புத் தேடி சென்ற மக்களின், வாழ்க்கை அவலங்கள், ஊரில் அவர்களுடைய குடும்ப வறுமை நிலை எல்லாம் அதில் சொல்லப்படுகின்றன. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குசினியிலும் கடைகளிலும் ஊழியர்களாகவும் கைவண்டி இழுக்கும் தொழிலாளிகளாகவும் தெருத் தெருவாய் சுண்டல், மிட்டாய் விற்று நடக்கும் தெரு வியாபாரிகளாகவும் பிழைப்பு நடத்தி வந்த கணவன்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் குடும்பத்து வறுமைச் சூழலையும் மனைவிமார்களுடைய தேடலையும் தெரிவிக்கும் கடிதங்கள் சிறு வயதில் எழுதிக் கொடுத்திருக்கிறேன். கொழும்பிலிருந்து வேலைத் துயரங்களை தாங்கிவரும் கடிதங்களை வாசித்துக் கொடுப்பதும் நானே தான்.

**தோப்பில் முஹம்மது மீரான்**
**தமிழ் நாடு**

(தொடரும்)

### கொக்காவில் கோபுரத்தின் மூலம்

## சகல தொடர்பாடல் வசதிகளையும் பெற வடபகுதி மக்களுக்கு நல்லதோர் வாய்ப்பு

### ஊடக அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொக்காவில் பல்நோக்கு ஒலிபரப்பு கோபுரம்திறந்து வைக்கப்பட்டதன் மூலம் தென் பகுதியிலுள்ள சகல தொடர்பாடல் வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வட பகுதி மக்களுக்கு கிடைத்துள்ளதாக ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி.கணேகல தெரிவித்துள்ளார்.

இப்பகுதி மக்களுக்கு உண்மையான தகவலை அறியும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது வடபகுதி மக்களுக்கு மாத்திரமன்றி சகல ஊடகங்களுக்கும் கிடைத்த வெற்றியாகுமென்று ஊடக அமைச்சின் செயலாளர் கூறினார்.

தென்பகுதியிலுள்ள சகல ஊடக நிறுவனங்களும் தொலைத் தொடர்பாடல் அமைப்புக்களும் அவற்றின் சேவைகளை வடபகுதி மக்களுக்காக வழங்கி வருகின்றன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகிறது.

கொக்காவில் பல்நோக்கு ஒலிபரப்புக் கோபுரத்தை பிரதான திட்டமாகக் குறிப்பிட முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-)

## இராணுவத்தை விட்டு ஓடியவர் அதுகுறித்து புத்தகம் எழுதலாமா?

### முன்னாள் இராணுவத் தளபதி கேள்வி



(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து மாத்திரமல்ல நாட்டில் இருந்தும் அச்சம் காரணமாக 1990 ஆம் ஆண்டு தப்பிச் சென்றவர் யுத்தத்தில் எப்படி வெற்றி பெற்றோம் என்ற புத்தகம் ஒன்றை எழுதி அண்ணனிடம் வழங்கியுள்ளார். இந்த அண்ணனுக்கும் தம்பிக்கும் வெட்கமில்லை.

அந்த புத்தகத்தை படித்தால் இராணுவத்தில் உள்ள வீரர்கள் அதனை கிழித்து எறிந்து விடுவார்கள் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் தயாரித்துள்ள அறிக்கை தொடர்பாக பதிலளிக்கும் போதே முன்னாள் இராணுவத் தளபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கெதிராக பொன்சேகா தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணையில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் சிறைச்சாலை அதிகாரிகளினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட போதே அவர் இதனைத் கூறியுள்ளார்.

இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்த்தன,

நாட்டினதும் இராணுவத்தினதும் சட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட இராணு நீதிமன்றத்தின் விசாரணைகளை ஜனாதிபதிக்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி உறுதிப்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்ட காலத்தில் தனக்கு இராணுவச் சட்டம் பொருந்தாது என சரத் பொன்சேகா கூறிய போதிலும் இராணுவச் சட்டம் மற்றும் கூட்டுப்படை தலைமை அதிகாரி சட்டத்திற்கு அமைய அவர் இராணுவச் சட்டத்திற்கு உட்பட்டவர் என்பது தெளிவாகியுள்ளதாகவும் சஞ்சீவ ஜயவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (4-2)

## 72 தமிழர்களை கனடாவுக்கு கடத்திய 4 நபர்களுக்கு பிணை

(கொழும்பு)

ஓசியன் லேடி கப்பல் மூலம் கனடாவுக்கு 72 இலங்கைத் தமிழர்களை கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள நான்கு இலங்கை தமிழர்களுக்கு நேற்று முன்தினம் பிணை வழங்கப்பட்டது.

பிரிட்டிஷ் கொலம்பியா நீதிமன்றம் இந்த பிணையை வழங்கியது. நிபந்தனைகளின் அடிப்படையில் ரொக்கப் பிணையில் இவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து அவர்கள் நால்வரும் டொரண்டோவுக்கு திரும்பி தமது வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் 7 ஆயிரம் டொலர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் டொரண்டோவில் குறித்த நால்வரும் தற்போது வசிக்கும் முகவரியிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டும்.

கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் நியமங்களுக்கு ஏற்ப கடவுச்சீட்டு விசா மற்றும் பயண ஆவணங்களை பெற்றுக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனைகளை நீதிமன்றம் விதித்தது.

அவர்களுக்கான அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நால்வரும் 72 இலங்கை தமிழர்களை இலங்கையில் இருந்து கனடாவுக்கு கடத்தி வந்தனர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த 72 பேரும் தற்போது கனடாவில் தொழில் புரிந்து வருகின்றனர். (4-2)

## யாழ்.மாவட்டத்தில்

## இவ்வருடம் ஜூன் மாதம் வரை காசநோய் அறிகுறியுள்ள 70 பேர் இனங்காணப்பட்டனர்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் ஜூன் மாதம் வரை 60 தொடக்கம் 70 வரையான காசநோய் அறிகுறியுள்ள நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இந்நோயால் பாதிக்கப்படுவோர் யாழ். மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.அத்தோடு இலவச சளிப் பரிசோதனை, கதிர்வீச்சு ஒளிப்படம் பிடித்தல் மூலம் கிருமித் தொற்றை கண்டு கொள்ளலாமெனவும் தொடர்ந்து 3 கிழமைகள் இருமல் இருப்பவர்கள், இரவில் காய்ச்சல் அறிகுறி தென்படுபவர்கள் மற்றும் உடல் மெலிவுற்றவர்கள், மருந்திற்கும் கட்டுப்படாத இழுப்புள்ளவர்கள் மேற்படி பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் மேற்படி நோயை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

அத்தோடு ஆரம்பத்தில் தொடர்ந்து 6 மாதங்கள் மருந்தை உட்கொள்வதன் மூலம் இந்நோயிலிருந்து விடுபடலாமெனவும் மேலும் இந்நோய் கூடிய பின்னர் (மருந்து எதிர்ப்புக் கிருமி ஏற்பட்ட பின்) எம்.டி.ஆர். ஊசி ஏற்றுவதன் மூலமே கட்டுப்பாட்டிற்கு கொண்டு வர முடியுமென்வும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் மேற்படி நோயாளி ஒருவர் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் குடும்பத்தில் ஒருவருக்கு மேற்படி அறிகுறி தென்பட்டால் குடும்பத்தினர் மட்டுமல்லாது அவருடன் தொழில் செய்பவர்களும் பரிசோதனையை மேற்கொள்வது சாலச் சிறந்ததென கூறப்படுகின்றது.

கூடுதலாக காற்றோட்டம் இல்லாத சிறிய அறைகளிலிருந்து கூட்டமாக கடமையாற்றுபவர்களே பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-29)

## என் உயிருக்கு ஆபத்து நேரிட்டால் சனல் -4 பொறுப்பு ஏற்க வேண்டும்



### சவேந்திரசில்வா தெரிவிப்பு

எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதன் பொறுப்பை சனல் 4 ஊடகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை பிரதிவதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்தேச வலையமைப்பு தமது பயணங்கள் தொடர்பில் கண்காணித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனில் சனல் 4 ஊடகவியலாளர்கள் திடீரென தம்மிடம் நேர்காணல் ஒன்றை நடத்தியதாகவும் இதன் மூலம் புலிகள் தரவுகளை திரட்டி வருவது புலனாகியுள்ளது.

சனல் 4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட காணொளி உண்மைக்குப் புறம்பானது. அதில் தோன்றியவர்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல.

45 நிமிடங்கள் நேர்காணல் நடத்திய போதிலும் இரண்டு நிமிடங்கள் மட்டுமே ஒளிபரப்புச் செய்யப்பட்டது. முடியுமென்றால் நேர்காணலை முழுமையாக ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்கவும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நோன்புக் காலத்தில் முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு சலுகை

(கொழும்பு)

ரம்ழான் நோன்புக் காலப்பகுதியில் தமது சமய அனுட்டானங்களை மேற்கொள்வதற்கு வசதியாக அரச துறையிலுள்ள முஸ்லிம் ஊழியர்களுக்கு விசேட விடுமுறை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் துறை ஊழியர்களுக்கும் இந்த விசேட விடுமுறை வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தனியார் தொழில் தருநர்களிடம் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் நாளாந்த தொழுகைக்காக விசேட விடுமுறை வழங்குமாறும் ரம்ழான் பெருநாள் தினத்தில் விசேட விடுமுறை வழங்குமாறும் நோன்புப் பெருநாளுக்கு 14 தினங்களுக்கு முன்னர் பண்டிகை அல்லது வேதன முற்பணம் வழங்குமாறும் அமைச்சர் கோரியுள்ளார்.

விசேட விடுமுறை வழங்கப்படவேண்டிய நேரங்கள் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளன. மு.ப.3.30 மணிமுதல் மு.ப.6.00 மணிவரை, பி.ப.3.15 மணிமுதல் பி.ப.4.15 மணிவரை,பி.ப.6.00 மணிமுதல் பி.ப.7.00 மணிவரை,பி.ப.7.30 மணிமுதல் பி.ப. 10.30 மணிவரை

(4-2)

### வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு

## உலக உணவுத்திட்டம் 4 கோடியே 86 இலட்சம் டொலர்களை வழங்கும்

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தாய்,சேய் நலன் மற்றும் போஷாக்குணவு வழங்கல் என்பவற்றுக்கான உலக உணவுத் திட்டம் 4 கோடியே 86 இலட்சத்து 24 ஆயிரத்து 632 அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்.மாவட்டங்களிலும் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளிலும் நீண்டகால நிவாரண அடிப்படையிலான வேலைத் திட்டங்களுக்கென வழங்கப்படும்.

உலக உணவுத்திட்டத்தின் நிதி உதவியின் ஊடாக 3 இலட்சத்து 71 ஆயிரம் பேர் நன்மையடையவுள்ளனர்.

அவசர அனர்த்த நிவாரண செயற்பாடுகளுக்கென உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் நிதியின் ஊடாக கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, ஆகிய மாவவட்டங்களிலும் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களில் சுமார் 5 இலட்சம் பேர் நன்மையடையவுள்ளனர்.

தாய், சேய் நலன் மற்றும் போஷாக்குணவுத்திட்டம், தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப பாடசாலை மாணவர்களின் சத்துணவு வழங்குதல், உணவுக்கான வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்தல், முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உலர் உணவு பெற்றுக் கொடுத்தல் போன்ற திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (4-2)



பீப்பிள் லீசிங் (People's Leasing) நிறுவனத்தின் புதிய தலைமையகக் கட்டிடத் திறப்பு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சம்பிரதாயபூர்வமாக கொடுக்கல் வாங்கலை ஆரம்பித்து வைத்ததையும், பின்னர் அந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர்கள், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், மக்கள் வங்கித் தலைவர் கருணாஜீவ மற்றும் பீப்பிள் லீசிங் சிஈஓ டி.பி.குமாரகே ஆகியோருடன் அளவளாவுவதையும் படங்களில் காணலாம்.

# சிறிலங்கா ரெலிகொம்மால் எஸ்.எல்.ரி. மெகாலைன் மீள அறிமுகம்

சிறிலங்கா ரெலிக்கொம் புதிய பெறுமதி மேம்படுத்தப்பட்ட இணைப்பாக (SLT Megaline) எஸ்.எல்.ரி. மெகாலைனை மீள் அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

ஒரு இணைப்பாக இருந்து 3 சிறப்பானஅனுபவங்களை அது வழங்குகின்றது. தரமான தொலைபேசி சேவை (குரல்), புறோட்பேண்ட் (துடங்கலற்ற,அதிவேக இணையம்) மற்றும் ஆள்சார் பொழுதுபோக்கு உணர்வுமிக்க(Peo TV) எந்தவொரு வீட்டுப் பாவனையாளரும், வியாபார நோக்குடையவரும் விரும்பும் வகையில் தொலைத்தொடர்புகள் சேவையில் தொழில்நுணுக்க புத்தாக்கத்தினை எஸ்.எல்.ரி. மெகாலைன் இணைத்துள்ளது.

புதிய விஸ்தரிக்கப்பட்ட எஸ்.எல்.ரி. மெகாலைன் ஆனது, 3 தனித்

MEGALINE
Telephone | Broadband | PeoTV

தனியான பொதிகளாக Single Play, Double Play மற்றும் Triple Play வழங்கப்படுவதனை வீட்டுக்கான மற்றும் வர்த்தகத்திற்கான என 2 வகைகளாக வரையறுத்துள்ளது. வீட்டுக்கான மற்றும் வர்த்தகத்திற்கான பிரிவுகளில் உள்ள அனைத்து 3 பொதிகளும் குறிப்பிட்ட பிரிவில் சேவை பயன்படுத்துநர்களின் தனிச் சிறப்பான தேவைகளை நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிங்கிள் பிளே பொதியானது தொலைபேசி தேவைகளை வழங்குகின்றது. டபிள் பிளே என்பது தொலைபேசி சேவையுடன் அதிவேக இணைய சேவை அல்லது பொழுதுபோக்கு தொலைக்காட்சி சேவை என்பவற்றை வழங்குகின்றது. ரிபிள் பிளே என்பது தொலைபேசி மற்றும் அதிவேக இணைய சேவையைத் தவிர தொலைக்காட்சி சேவையையும் வழங்குகின்றது.





# ஜனசக்தி அறிமுகப்படுத்தும் 'ஹோட்டல் பிளஸ்' காப்புறுதி

ஜனசக்தி காப்புறுதி ஹோட்டல் துறையினருக்காக ஜனசக்தி ஹோட்டல் பிளஸ் என்ற காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒரு விசாலமான காப்புறுதிக் கொள்கையான ஹோட்டல் பிளஸ், நட்சத்திர தரத்தையுடைய ஹோட்டல்கள்,சிறிய சொகுசு ஹோட்டல்கள் முதல்உல்லாசப் பயண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து உணவு விடுதிகளையும்செயற்படுத்துவோருக்கு காப்புறுதிச் சேவையை வழங்குகின்றது.

தீ மற்றும் அதனோடிணைந்த ஆபத்துகள்,தீயின் விளைவாக இழப்பு, களவு, பொதுமக்கள் பொறுப்பு, இடைவழிப் பணம், கண்ணாடி



உடைக்கப்படுதல், தனி நபர் விபத்து, நம்பிக்கை உத்தரவாதம், தொழிலாளர்கள் நட்டஈடு, மின் உபகரணங்கள், கொப்பறைகள், மற்றும் அமுக்க இயந்திர தொகுதி தொடர்பான இழப்பீடு போன்ற 11 இற்கும் அதிகமான மிக ஆபத்தான விடயங்களுக்கான இழப்புக்களை இந்த ஹோட்டல் பிளஸ் திட்டம் ஈடுசெய்கின்றது என ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்டர் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 108.70 | 110.30 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 177.11 | 181.14 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.86 | 159.03 |
| சுவிஸ் பிராங் | 134.47 | 138.92 |
| கனேடிய டொலர் | 113.53 | 116.95 |
| அவுஸ்திரேலிய டொலர் | 118.41 | 122.24 |
| சிங்கப்பூர் டொலர் | 89.67 | 92.25 |
| ஜப்பான் யென் | 1.39 | 1.43 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.49 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.80 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



இலங்கை வர்த்தக சங்கத்தின் (Ceylon Chamber of Commerce) புதிய தலைவராக சுசந்த ரத்நாயக்க (வலது) தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு முன்னாள் தலைவர் டாக்கடர் அனுர எக்கநாயக்க வாழ்த்துத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம். சங்கத்தின் 172ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டத்திலேயே இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் 21ஆவது நபர். இவரது பதவிக் காலம் 2 ஆண்டுகளாகும்.

சுசந்த இலங்கையின் முன்னணி தனியார் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்கின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பணவீக்கம் அதிகரிப்பு

இலங்கையின் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 7.5 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

ஜூன் மாதத்தில் இந்த எண்ணிக்கை 7.1 சதவீதமாக இருந்தது.

போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் வீட்டுப் பராமரிப்பு போன்ற துறைகளின் அதிகரிப்பு இப் பணவீக்க அதிகரிப்புக்கு காரணமாகும்.

2010 ஜூலையில் பணவீக்கம் 4.4 சதவீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிறுவன நிதிநிலைவரங்கள்

### ஜோன் கீல்ஸ் நிகரலாபம் 35% அதிகரிப்பு

இலங்கையின் மிகப்பெரிய தனியார் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்கின் இரண்டாவது காலாண்டு நிகர லாபம் 35 சதவீதம் அதிகரித்தது.

ஒரு வருடம் முன்பு 1.01 பில்லியன்ரூபாயாக இருந்த நிறுவனத்தின் நிகர லாபம் 1.37 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதேபோல் குழுமத்தின் வரிக்கு முன்பான இலாபம் 1.88 பில்லியன் ரூபாயாகும்.

முதல் காலாண்டில் குழுமத்தின் வருமானம் 15.69 பில்லியன் ரூபாயாகும். இது கடந்த ஆண்டு இதேகாலத்தில் ரூ.12.92 பில்லியனாகக் காணப்பட்டது.

### சம்பத் குழும வருமானம் 56 சதவீதம் அதிகரிப்பு




சம்பத் வங்கி மற்றும் 4 துணை நிறுவனங்களைக் கொண்டுள்ள சம்பத் குழுமம் கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும் இடத்து இந்த 2011 முதல் அரையாண்டில் திருப்திகரமான முடிபுகளைக் காட்டியுள்ளது.

குழுமம் 2011 இன் முதல் அரையாண்டில் வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.2977 மில்லியனைப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு வரிக்கு முந்தைய இலாபம் ரூ.1885 மில்லியனாகும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6537.25 | 6845.38 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6029.75 | 6210.07 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் புரள்வு (ரூபா.மில்.) 9,725.25

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** திறீ ஏக்கர் பார்ம்ஸ்(140.80), கிரேன் எல்வேட்டர்ஸ் (140.80), ஹொரன்பி ஹோட்டல்(284.20), ஹெஸ்னர்(280.60), கார்டியன் கப்பிரல்(207.70).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** பரஹன்(1875.00), நன்டா பினான்ஸ்(17.10), ஏஎம்எப் கோ லிமிட்(465.80), மோரிஷன்ஸ்(X)(2150.00), அபான்ஸ் பினான்சியல்(81.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# சூடான்களிடையே புதிய 'நாணய யுத்தம்'?

மூன்று வாரங்களுக்கு முன்னர் தென்கு சூடான் தனியாகப் பிரிந்துசென்று தனக்கான சொந்த நாணயத்தை பாவனைக்கு விட்டுள்ள நிலையில், சூடானும் தனக்கான புதிய நாணயமொன்றை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

நிதி தொடர்பான ஏற்பாடுகளில் நீண்டகாலமாக இருந்துவரும் பல்வேறு இழுபறிகள் காரணமாக 2 நாடுகளின் பொருளாதாரங்களும் பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

பழைய நாணயத்தாள்களை 3 மாத காலத்துக்குள் புதிய நாணயத்துக்கு மாற்றிவிட நடவடிக்கை எடுக்கப்படுமென கூறியுள்ள சூடான் மத்திய வங்கி, தெற்கு சூடான் ஏற்கெனவே புதிய நாணயத்தைப் பாவனையில் கொண்டுவந்துள்ள நிலையில், சூடான் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இதனைக் கொண்டுவருவதாக அறிவித்துள்ளது.

புதிய நாணயத்துக்கு மாறும் மக்கள் தெற்கு சூடானில் சுமார் இரண்டு பில்லியன் வரையான சூடானிய பவுண்டுகள் பாவனையில் இருப்பதாகவும் அது சூடானின் பொருளாதாரத்தைப் பாதிக்கக் கூடியது எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரண்சியோர் அதாவது நாணயங்களுக்கிடையிலான யுத்தமொன்று அவசியமில்லையென்ற போதிலும் அதுவே நடந்து கொண்டிருப்பதாக சூடானிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எண்ணெய் வளத்தில் பெரும்பாலானவை தெற்கு சூடானிலேயே இருக்கின்றன. ஆனால் அவற்றை அகழ்ந்து ஏற்றுமதி செய்யும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் சூடானிலேயே இருக்கின்றன.

இவ்வசதிகளை பயன்படுத்த தென்சூடான் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்ற விடயத்திலேயே இருதரப்பும் இணங்க முடியாமல் இருக்கின்றன.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### காதல் சுகமானது

உன்னை தொட்டுப்பேச
நினைத்துவிடாமல்
தொடர்ந்து பேச எண்ணும் ஆசை
அது அழகோடு நின்று விடாமல்
ஆழமான அன்பை
நேசிக்கும் போது
என் கட்டில் கூட
என்னோடு கனவு காணும்
கனவுகளாய் கட்டிலுக்கு வருவாய்
கையணைத்து முத்தமிடுவேன்
ஆனால் அதற்கு மேல்
உன் நிழல் வடிவத்தை கூட
என் கனவுகள் அத்து மீறவில்லை
அதனால் என்றும் நீ
கன்னியாக காதலியாக
நித்திரை கலைந்துவிட
உன் நினைவுகளின் சுற்றிவளைப்பு
இப்படியே காதல் சுகமானது.

வி.செந்தமிழ்ச்செல்வன்
விசுவமடு



### உயிரின் உணர்வு

தாயே உன் அவலக்குரல்
தரணிக்குக் கேட்காவிடினும்
சேயாய் உந்தன் கருவறையில்
உள்ள எனக்குத்தினமும் கேட்கின்றது
அபலை நீ தினம் படுகின்ற
கவலைகளைப் பார்த்து நானும்
கண்ணீர் வடிப்பதைக் கண்டால்
விண்ணீரும் தோற்றுவிடும்
நான் வந்து கேட்டால்
எதையும் தருவாய்
உன்னுயிராக வந்து
உனைத்தேற்றுவேன்
தப்பாகப் பேசினால்
தண்டித்துவிடுவாய்– நான்
அப்பாவைக் கேட்டால்
நீ என்ன செய்வாய்
தடுப்பில் என்று சொல்லி
தாலியைக் காட்டி
சடுக்கென்று என்னை நீ
சமாளிக்கும் போது
படக்கென்று விழுகின்ற
உன் விழி நீர்
சடக்கென்று பதில் சொல்லும்
அப்பாவைக் காணவில்லையென்று

ராதி-சிவா
பொலிகண்டி

### அவரவர் பார்வையில்

தாய்
கோயில் கட்டிக் கொள்ளாவிட்டாலும்
தினமும் அருள் தரும் தெய்வம்
காப்பியம்
என் கவிதைகளை நீ வாசிக்கும் போது
அவை ஆறாவது காப்பியமாய்
மாறிவிடுகிறது
பலன்
எண் பிரதி பலிப்பில் இழந்து விட்ட
நினைவுகளின் சுவடுகளை கோர்த்து
வைத்தேன் கிடைத்தது கவிதை...
நாட்குறிப்பு
முத்தமிடுகிறது எந்த நாளும்
இரவோர பேனை முனை
ஏக்கங்கள் மட்டும்
இதழ் மடியில்

கங்கா.பா
தட்டாதெரு

### என்றென்றும்

மாதங்கள் பத்து– எனை
சுகமாக சுமந்தவள்
எனதன்னை தோளில்– எனை
இன்றுவரை சுமந்திடும்
என் தந்தை
அந்த நிலவினும்
மேலாக ஒளிர்கின்றார்
என்மனதில்...

ஜனகன் கிஷா,
அல்வாய் வடக்கு

### நட்பு

தாய்க்குப் பின்
தாரமென்பார்கள்...
ஆனால் என் வாழ்வில்
தாய்க்குப் பின்
எல்லாமே என் உயிர்
நட்புத் தான்...

செ.ரவிசாந்
குப்பிளான்

### புரிதல்

பூக்களின்
பாக்களின் காதலின்
புரிந்துணர்வுகளை
அர்த்தங்களால்
அழகுபடுத்தி
கவிதையாய்
வடிக்கின்றேன்
எனக்குள்
நீ...
நிரந்தரமாய்
இருப்பதை
மறந்து...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### இமயம் தொட...

இழப்புக்களை
நினைப்பது தவறில்லை
நினைவுகளையே
இழப்புக்களாக்கிவிடாதே
முளைக்கின்ற விதை
பூமியைத் துளைக்காவிடின்
விருட்சமாகுமா?
முட்டி மோதி முன்னேறு
இருளில்லாமல் ஒளியுண்டோ?

மாவைநா:கஜேந்திரன்

### நினைவுகளுடன்

பசுமை நிறைந்த
பள்ளி நினைவுகளை
புரட்டிப்பார்க்கிறேன்
பனி போன்ற கண்கள்
பாதை தெரியாத பயணங்கள்
பொறுப்புக்களற்ற இதயங்கள்
வலிகளற்ற வேதனைகள்
வீணாகிப்போன விதண்டாவாதங்கள்
துடிப்போடும் துடுக்குத்தனத்தோடும்
துள்ளித்திரிந்த பள்ளிவாழ்க்கை
நினைக்கும் போது
நெஞ்சம் கனக்கின்றது
பிரிந்து போன பள்ளி உறவுகளை
திரும்பவும் ஒருமுறை
பள்ளியில் பார்க்கும் போது

வி.கஜேந்திரன்
யா/நெல்லியடி ம.ம.வி

## மௌனத்தின் தேடல் – 81



### உதவும் கரங்கள்

ஏய் அற்ப மானிடா
நீ அவல மனிதனை நீருக்குள்
அமிழ்த்தினால் –என்
உதவும் கரங்கள்
அவர்களைத் தேடி
எந்நாளும் நீளும்....

உமாசங்கர்
யா/பெரியபுலம் ம.வி

### மனிதம்

ஆற்றில் தவறி
வீழ்ந்து புதையும்
சக வீரனைக்
கை கொடுத்து
காப்பாற்ற முயற்சி
மனிதம் இன்னும்
உலகில்
மரணிக்கவில்லை

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### மனச்சாட்சி

மனச்சாட்சி இல்லாதோர்
மரணத்தில் தள்ளிவிட
மனச்சாட்சி உள்ள
மாமனிதன் தரங்கொடுக்கிறான்!

அ.புவனா
கறுக்காய்

### கண்ணெதிரே...

கண்ணிமைக்கும் நேரத்தில்
கைநழுவிச் சென்றாயே
காப்பற்ற கதியுமில்லை
கண்ணெதிரே மறைந்தாயே

தி.ஆத்மன்
யாழ்.இந்துக்கல்லூரி

### ஏமாளியாகாதே

சாக்கடையுள் வீழ்ந்தவனை
கரைசேர்க்க முயலுகின்றாய்
காக்குமுன்னையும் கரைசேர்ந்ததும்
அச்சாக்கடையுள் வீழ்த்திடுவதை
அறியாயோ!

பொ.புனிதன்
வரியப்புலம்

### தத்தளிப்பு

நீர் தாண்டுபோனது
நீருக்குள் அல்ல
நீர் கொன்றுகுவித்த
தமிழர்களின் இரத்தத்தில்
காயங்கள் ஆறும்வரை
தாழவும் மாட்டீர்
மீளவும் மாட்டீர்
தத்தளித்துக் கொண்டே
இருப்பீர்...

ந.வினோரூபன்
யா/ நெல்லியடி ம.ம.வி

### மனிதப் பண்பு

இன்னல்களுக்கு மத்தியில்
நீ படும் பாட்டையும்
அவஸ்தையை கண்டும்
காணாமல் போவதற்கு
நான் ஒன்றும் மிருகம் –
அல்ல மனிதன்

ராஜி

### உத்வேகம்

உள்ளத்தை உருக்கிடும்
உணர்ச்சியின் உந்தலால்
உதவிக்கரம் நீட்டியே
உயிர்காக்க முனையும்
உறவின்
உத்வேகம் இது...?

ஆர்.ஜெயா
அராலி

### அமைதிக்கரை சேர்வதற்கு!

ஆறு தசாப்தமாய் இருளாற்றில்
ஆருமற்றுத் துயரலையில்
துடிக்கின்றோம்
மாறாத சோகத்தை மாற்றுதற்கு
ஊருலகே எமக்குவழி காட்டிடுவீர்
சீருடனே அமைதிக்கரை சேர்வதற்கு

குளப்பிட்டி
க.அருமைநாயகம்

### மீட்டுத்தா

ஓ... உலகமே
தாழும் எம் இனத்தை
தலை தொட்டுத் தூக்காயோ?
நிலை கெட்ட எம்வாழ்வு
நிலையாக்க மாட்டாயோ?

பிரியா

### உணர்வு

இரக்கப்படாமல்
உன்னைத் தாண்டிச்செல்ல
நான் ஒன்றும்
இதயமில்லாதவனல்ல
என் உயிரைக் கொடுத்தேனும்
உனை மீட்பேன்

தனு
கொக்குவில்

### விடியல்

மகனே கலங்காதே!
மாறும் ஒருநாள் நம் நிலை
உன்னால் மலரும் செந்தாமரை
உன்நிலை உணர்
உடன் தொடங்கும் பயணம்
சென்றுவா பகை வென்று

சிந்தியா

### தன்மானம்

நடப்பதை வேடிக்கை பார்க்க
நான் கோழையல்ல
தன்மானமுள்ள மனிதன்
தலையே போனாலும்
உன்மீட்சியே என் இலட்சியம்

சங்கர்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 82

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 05.08.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -




# விழிப்பாயிருங்கள் !

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(31.07.2011 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
4. இந்தியன் பாங்க்
5. இலங்கை வங்கி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
8. கபீப் பாங்க் லிமிடெட்
9. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. சிற்றி பாங்க் என்ஏ
12. செலான் பாங்க் பிஎல்சி
13. டிஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
14. டொயிச் பாங்க் ஏஜி
15. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
16. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. பப்ளிக் பாங்க் பேர்காட்
19. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
20. மக்கள் வங்கி
21. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்சியல் சேர்விசஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
11. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
12. கப்பிட்டல் அலயன்ஸ் பினான்ஸ் லிமிடெட்
13. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
14. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
15. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
16. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
17. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
18. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
19. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
21. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
23. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
24. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
25. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
26. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
27. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
28. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
29. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
30. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
31. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
32. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
33. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
34. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
35. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
36. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
38. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.
- ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்/ அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றிற்கு இரையாகாமல் உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை பாதுகாக்கும்படி பொதுமக்கள் வலிமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இலங்கை மத்திய வங்கி**

தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA 60 growth & stability 1950-2010


# தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விரைவில் விடுதலை செய்யப்படவேண்டும்

## பிமல்ரட்நாயக்க கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளான கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் ஆகியோருக்கு ஒரே மாதத்தில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதாக ஜே.வி.பி. யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய தமிழ் இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு மிக நீண்ட காலம் தேவைப்படுகின்றது.

அப்பாவி தமிழ் இளைஞர்-யுவதிகள் 26 மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் யானைகளை பார்வையிடுவதற்கு 18 இடங்களை அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் உறவினர்கள், காணாமல் போனவர்கள் பற்றிய தரவுகளை பெற்றுக் கொள்வதற்கு ஒரு தகவல்மையமே உருவாக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிமல் ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். (4-2)

# வங்கிக் கடன் பெறுவோரை வங்கி அறிந்திருக்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

முறையான காரணங்கள் இன்றி அரசியல்வாதிகளின் விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் கடன்களை பெற்றுக் கொள்ள வங்கிகள் இடமளிக்க கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியின் புதிய முகாமையாளரரை நியமிக்கும் நிகழ்வு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக கடன் பெறுவோரை வங்கி சிறந்த முறையில் அறிந்துகொள்ள வேண்டும்என ஜனாதிபதி குறிப்பிட்டார்.



இதன்மூலம் கடன் பெறும் போது பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவங்களை குறைத் துக்கொள்ள வங்கியால் முடியும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார். (4-2)

# கொழும்பிற்கு மேலும் 100 ஆடம்பர பஸ்கள்

(கொழும்பு)

இன்னும் சில காலத்தில் பயணிகளுக்கு சௌகரியமான பஸ்போக்குவரத்தை வழங்குவதற்காக கொழும்பில் 12 பஸ் வழித்தடங்களில் அதி- ஆடம்பர நகர பஸ் சேவையை வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைப் போக்குவரத்துச் சபை 100 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

ஜுலை மாதம் நடுப்பகுதியில் மொறட்டுவ- புறக்கோட்டை பாதையில் வொல்வோ கம்பனியால் வழங்கப்பட்ட ஆடம்பர பஸ்ஸை இலங்கை போக்குவரத்துச் சபை முதலாவது பரீட்சார்த்த ஓட்டத்திற்கு பயன்படுத்தியது. இந்த பஸ் நாளொன்றுக்கு 18 ஆயிரம் ரூபா வருமானம் ஈட்டுவதாக போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இரண்டாவது டாட்டா ஆடம்பர பரீட்சார்தத பஸ் கொட்டாவ -புறக்கோட்டை பஸ் வழி நடத்தலில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த பஸ் சேவையும் வெற்றியளிக்கும் எனக் கருதுவதாக தகவலறிந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

நீர்கொழும்பு -புறக்கோட்டை ,கெஸ்பாவ -புறக்கோட்டை, கடுவெல- கோட்ட ,நீத்தம்புவ- புறக்கோட்டை ஆகிய பாதைகளில் ஆடம்பர பஸ்களை அமைச்சு அறிமுகம் செய்யவுள்ளதாக அவர் கூறினார்.

ஒரு டெமோ ஆடம்பர பஸ்ஸின் விலை 16 மில்லியன் ஆகும் என கூறிய அவர் வொல்வோ பஸ்ஸின் விலை தெரிய வில்லை எனவும் அது டெமோ பஸ்ஸைவிட கூடுதல் விலையானது எனவும் கூறினார். (4-2)

# பொலிஸாரால் கைதானவர் தாக்குதலால் மரணமானார்

## உறவினர்கள் முறைப்பாடு

(கொழும்பு)

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மற்றுமொரு நபர் உயிரிழந்துள்ளார். போதை பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொரளை பிரதேசத்தை சோந்த சன்ன இசாகர என்பவரே இவ்வாறு கைது செய்யப் பட்டிருந்தார்.

உயிரிழந்த சந்தேக நபரின் உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன்படி சந்தேக நபரின் மரணம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளதாக உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும் மாரடைப்பினால் சந்தேக நபர் இயற்கை மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (4-2)

## வேலைவாய்ப்புச் தேடிச்செல்லும் பணிப்பெண்களுக்கு தொடரும் அவலம்

(கொழும்பு)

ஜோர்தான் நாட்டிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்ற நாரஹேன்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் அந்த வீட்டில் பலியாகியுள்ளார். அந்த மரணத்தில் தமக்கு சந்தேகம் நிலவுவதாகவும் பலியான பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மேமாதம் ஜோர்தானுக்கு சென்ற அந்தோனிதேவி என்ற 32 வயதுடைய குறித்த பெண் எரிவாயு சிலிண்டர் வெடித்து மரணமடைந்ததாகக் கடந்த 28 ஆம் திகதி வீட்டு உரிமையாளர் தொலைபேசியில் அறிவித்ததாகவும் அந்த மரணத்தில் தமக்குச் சந்தேகம் நிலவுவதாகவும் பலியான பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அப்பெண் கடந்த 16 ஆம்திகதி அவரது வீட்டிற்கு தொலைபேசி அழைப்பொன்றை எடுத்துத் தன்னால் அங்கு இருக்க முடியாது எனவும் தான் பல்வேறு விதத்தில் துன்புறுத்தப்படுவதாகவும் எப்படியாவது தன்னை நாட்டிற்கு அழைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கூறியுள்ளார்.

இவ்வாறு அப்பெண் கூறியதையடுத்து பெண்ணின் உறவினர்கள் அப்பெண்ணை வெளிநாட்டிற்கு அனுப்பிய வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதுடன் அது தொடர்பாக தாம் தேடிப் பார்ப்பதாக அந்த வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க கடந்த 28ஆம் திகதி ஜோர்தானில் இருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது. அதன்போது குறித்த பெண் எரிவாயு சிலிண்டர் வெடித்து பலியானதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தமாக செல்லும் இலங்கை பணிப்பெண்கள் அங்கு பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவதும் கொலை செய்யப்படுவதுமான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்ற வண்ணமே உள்ளன. (4-2)

## கொழும்பு மாநகரசபை தேர்தல் விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைத் தேர்தலை உடன் நடத்தும்படி தேர்தல்கள் திணைக்களத்திற்கு உத்தரவிடும்படி உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆர்வலரான கலாநிதி பாக்கியசோதி, சரவணமுத்துவும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் இருவரும் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர். கொழும்பு மாநகர சபைக்காக இறுதியாக நடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பதவிக்காலம் ஜூன் 2, 2006 ஆம் திகதி ஆரம்பமாகியது. மாநகர சபை கட்டளைச் சட்டம், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கட்டளைச் சட்டம் என்பவற்றுக்கு அமைய கொழும்பு மாநகர சபைக்கான தேர்தல் ஜூன் 2, 2010 ஆம் திகதிக்கு முன் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என மனுதாரர் தெரிவித்துள்ளார். (4-2)

## இலங்கைக்கான உதவிகளை நிறுத்துவது தொடர்பில் இறுதித் தீர்மானம் இல்லை

மனிதாபிமான உதவிகள் தவிர்ந்த இலங்கைக்கான ஏனைய உதவிகளை நிறுத்திக் கொள்வது தொடர்பில் இன்னும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உதவிகளை இரத்துச் செய்யும் யோசனைத் திட்டம் தொர்டர்பில் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படும் வரையில் எவ்விதத் தீர்மானங்களும் எடுக்கப்படமாட்டாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2)

## கலைஞர் தொலைக்காட்சியின் சொத்துக்களை முடக்கத் திட்டம்

(சென்னை)

கலைஞர் தொலைக்காட்சி நிறுவனத்தின் சொத்துக்களை பணமோசடி தடுப்புச் சட்டவிதியின் கீழ்க் கொண்டுவர அமுலாக்கற்பிரிவு நடவடிக்கை எடுத்துவருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து அமுலாக்கற் பிரிவு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிடம் இருக்கின்ற கலைஞர் தொலைக்காட்சி நிறுவனத்தின் 215 கோடி ரூபா மதிப்பிலான சொத்துக்களை தாங்கள் அடையாளம் கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கலைஞர் தொலைக்காட்சி நிறுவனத்தில் தி.மு.க.வின் தலைவர் கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளுக்கு 60 சதவீதமான பங்குகளும் மகள் கனிமொழிக்கு 20 சதவீதமான பங்குகளும் உள்ளன.

அதேபோன்றுகலைஞர்தொலைக்காட்சி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சரத்குமாருக்கு 20 சதவீதமான பங்குகள் உள்ளன.

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள டிபிரியலிட்டியின் சினியுக் நிறுவனத்தில் இருந்து 214கோடி ரூபா கடனாகப் பெற்ற விவகாரத்தினால் தற்போது கனிமொழியும் சரத்குமாரும் கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர்

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களது விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**பூங்கொத்து அமைத்தல்**

பி.கவிசாயினி (சுபீனா முன்பள்ளி), த.கவிப்பிரியன் (ஞானதீபம் முன்பள்ளி), ச.திரிசாயினி (சரசாலை வடக்கு முன்பள்ளி)

**உருவம் அமைத்தல்**

பி.பார்த்திபன் (ஞானதீபம் முன்பள்ளி), டெ.கமில்ரன் (ஞானதீபம் முன்பள்ளி), அ.அபர்ணா (ஞானதீபம் முன்பள்ளி)

**கோபுரம் அமைத்தல்**

த.கஜாங்கி (கண்ணகை முன்பள்ளி), தெ.கவிப்பிரியன் (ஞானதீபம் முன்பள்ளி), கு.தேனுகா (கண்ணகை முன்பள்ளி)

இவர்களுக்கான பரிசில்கள் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வில் வழங்கப்படும் என்று நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)




★ 1492-ஸ்பெயினில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.

★ 1498-தனது மூன்றாவது பயணத்தின் போது கொலம்பஸ் டிரினிடாட் தீவை அடைந்தார்.

★ 1588-ஆங்கிலேயர்களுக்கும் ஸ்பானியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது கடற்படைச் சமரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

★ 1655-உருசியா லித்துவேனியாவின் தலைநகர் வில்னியூசைக் கைப்பற்றி ஆறு ஆண்டுகள் தமது ஆட்சியில் வைத்திருந்தது.

★ 1658-அவுரங்கசீப் இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னர் ஆனார்.

★ 1741-புனித ரோமப் பேரரசன் ஏழாம் சார்ள்ஸ் ஆஸ்திரியா மீது படையெடுத்தான்.

★ 1805-இந்திய விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிரித்தானியரால் தூக்கிலிடப்பட்டார்.

★ 1865-உலகின் முதலாவது குறுகிய அகல தொடருந்துப் பாதை ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் அமைக்கப்பட்டது.

★ 1938-கிரேக்கம், துருக்கி, ருமேனியா, யுகொஸ்லாவியா ஆகிய நாடுகளுடன் பல்கேரியா அமைதி உடன்பாட்டிற்கு வந்தது.

★ 1954-ஆர்டிடோ டெசியோ என்பவர் தலைமையிலான இத்தாலிய குழு ஒன்று கே-2 கொடுமுடியை எட்டியது.

★ 1964-சந்திரனின் முதலாவது மிகக் கிட்டவான படங்களை ரேஞ்சர் 7 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.

★ 1971-அப்பலோ 15 விண்வெளி வீரர்கள் லூனார் ரோவர் வண்டியை சந்திரனில் செலுத்தி சாதனை புரிந்தனர்.

★ 1976-வைக்கிங் 1 விண்கலத்தினால் செவ்வாய்க் கோளில் எடுக்கப்பட்ட புகழ்பெற்ற மனித முகம் படத்தை நாசா வெளியிட்டது.

★ 1987-ஆல்பர்ட்டா மாநிலத்தில் எட்மன்டன் நகரில் இடம்பெற்ற சூறாவளியில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர்.

★ 1988-மலேசியாவின் பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 32 பேர் உயிரிழந்ததுடன் ஆயிரத்து 674 பேர் படுகாயமடைந்தனர்.

★ 1992-நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் தாய்லாந்து விமானம் ஒன்று வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-பிடெல் காஸ்ட்ரோ தனது அதிகாரத்தை தற்காலிகமாக தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்தார்.

★ 2007-வட அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவம் தனது மிக நீண்டகால இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அங்கிருந்து வெளியேறியது.

**பிறப்புக்கள்**

★ 1704-கேப்ரியல் கிராமர், சுவிஸ்சர்லாந்து கணிதவியலாளர் (இ.1752)

★ 1874-செய்குத்தம்பி பாவலர், தமிழ் எழுத்தாளர், சதாவதானி (இ.1950)

★ 1912-மில்ட்டன் ஃப்ரீட்மன், பொருளியல் நிபுணர் (இ.2006)

★ 1966-ஜே.கே.ரௌலிங், ஆங்கில எழுத்தாளர்

**இறப்புக்கள்**

★ 1805-தீரன் சின்னமலை, குறுநில மன்னன் (பி.1756)

★ 1980-முகமது ரபி, புகழ் பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகர் (பி.1924)

★ 1996-அரங்க சீனிவாசன், தமிழகக் கவிஞர், எழுத்தாளர் (பி. 1920)

# பல்கலைக்கழக கல்வி பிரதானிகளுக்கு புதிய நியமனங்கள் வழங்க வேண்டும்



## மஹீம் மென்டிஸ் தெரிவிப்பு

பல்கலைக்கழக கல்வி பிரிவின் பிரதானிகளுக்கு மீண்டும் புதிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மஹீம் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய நியமனங்கள் வழங்கப்படாத பட்சத்தில் மீண்டும் பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படும் நிலைமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கல்விப் பிரிவு பிரதானிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இராஜினாமா கடிதங்கள் பல்கலைக்கழக நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்படவில்லை எனவும் இதனால் புதிய நியமனங்களை வழங்க தேவையில்லை எனவும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் கடந்த 28 ஆம் திகதி உப வேந்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரை யாடலின் போது கவனம் செலுத்தப்பட்டதாகவும் அதன் போது நியமனக்கடிதங்கள் வழங்கப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (4-2)

# நடமாடும் சுற்றுலாச் சேவைகள் மூலம் யாழ்.சுற்றுலாத்துறை வளர்ச்சியடையும்

## ஹோட்டல் உரிமையாளர் சம்மேளனத் தலைவர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுற்றுலாத்துறை மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது என யாழ்.மாவட்ட ஹோட்டல் உரிமையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் மரியதாஸ் அன்ரன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் நேற்று யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற நடமாடும் சுற்றுலா சேவையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டம் சுற்றுலாத்துறையில் தற்போது மிக வேகமாக வளர்ச்சிகண்டு வருகின்றது.

தென்பகுதியிலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் கணிசமானளவில் சுற்றுலாப்பயணிகள் யாழ்.மாவட்டத்திற்கு நாளாந்தம் வந்து செல்கின்றனர்.

இதற்கு இலங்கை சுற்றுலாத்துறை மிகவும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

இதனை மேலும் வளர்ச்சி பெற செய்யும் நோக்குடன் நடமாடும் சுற்றுலா சேவையையும் ஏற்பாடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# மூத்தவங்கியாளர் கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் பொன்விழாவையொட்டி இவ்வங்கியின் மூத்த வங்கியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். மக்கள் வங்கி தலைமையலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் அறிவித்துள்ளார். (2-4)

# தொட்டியடி வீதியை புனரமைக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிலுள்ள தொட்டியடி வீதியானது கடந்த 15 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பயணிக்கமுடியாத அவலநிலை உள்ளது.

விஸ்வமடு பலநோக்கு கூட்டுறவுசசங்க தலைமைப்பணியகம்,விஸ்வமடு மகா வித்தியாலயம், ஆலயங்கள் மற்றும் விஸ்வமடு குளம் ஆகியவற்றிற்கு இவ்வீதியூடாகவே பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

இப்பகுதியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைப்பணியகம் அமைந்துள்ளதால் பொருட்களைக் கொண்டு செல்வதில் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

அத்தோடு இவ்வீதியால் பயணிக்கும்பொழுது விபத்துக்கள் இடம்பெறும் அவலநிலையும் உள்ளது.எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென்று அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3)

# மஹோற்சவம்

(மருதங்கேணி)

புலோலி மேற்கு ஆலடிப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும்,மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம் பெறும்.அதனைத்தொடர்ந்து 13 ஆம் திகதி காலை 8 மணிக்குதீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (2-35)

## எச்.என்.பி.அஷ்யூரன்ஸின் திட்டத்தில்

# சந்தைப்படுத்தல் தொழில் வாய்ப்பு இலவசப்பயிற்சிப்பட்டறை ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

சந்தைப்படுத்தல்,தொழில் வாய்ப்பு தொடர்பான இலவச பயிற்சிப்பட்டறையொன்றை யாழ்.மாவட்டத்தில் நடத்த எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் திட்டமிட்டுள்ளதாகவும் அது தொடர்பான நடவடிக்கையை விரைந்து தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் எச். என்.பி. அஷ்யூரன்ஸ் நிறுவன சந்தைப்படுத்தல் விநியோகப் பொது முகாமையாளர் லலித் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் யாழ்.அலுவலகத்தில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் நிறுவனமானது இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தோடு இணைந்து தனது உத்தியோகத்தர்களுக்கு சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவை வளர்ப்பதற்காக சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறியை இங்கு ஆரம்பித்துள்ளது.

அஷ்யூரன்ஸ் ஆனது தனது வியாபார நலனுக்கு அப்பால் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் தனது உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளது.

தேசிய சந்தைப்படுத்தல் நிறுவனம் ஒரு அரச நிறுவனமாகும். இங்கு பயிற்றப்படும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் ஏற்றுக் கொள்ளும்.

இத்தகைய பயிற்சிநெறி தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்றை இங்கு நடத்தவும் அதில் வங்கி ஊழியர் அல்லாதவர்களும் பங்குபற்ற முடியும்.

இதனை எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் யாழ். மாவட்டத்திலுள்ளவர்களின் நலன்கருதி இலவசமாக நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் கல்வித்துறைத் தலைவர் சமந்த ரட்ணநாயக்க,வியாபார அபிவிருத்தி முகாமையாளர் செல்வி மிகிநினி பொன்சேகா,எச்.என்.பி.அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் விரிவாக்க தலைவர் ஜவின் நிர்கலஸ், விற்பனை மற்றும் அபிவிருத்தி முகாமையாளர் ஜெகான் ஹனில், வலய முகாமையாளர் எஸ். புவிராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (4-6)

# புனித ரம்ழானை முன்னிட்டு எயிட் ஸ்ரீலங்கா உணவுத் திட்டம்

(கொழும்பு)

புனித ரம்ழானை முன்னிட்டு முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா உணவு வங்கி திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

வீடுகளில் எஞ்சும் உணவுப் பொருட்களை முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா சேகரித்து கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பட்டினியால் வாழும் ஏழை குடும்பங்கள் மற்றும் சிறார்களுக்கு வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக உணவு வீண் விரயத்தை தடுக்க முடியும் என முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா எதிர்பார்க்கின்றது.

முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்காவின் உணவு வங்கி பம்பலப்பிட்டி நிமல் வீதியிலுள்ள ஜும்மா பள்ளிவாசலிற்கு முன்னாள் அமைக்கப்படவுள்ளது.

இந்த உணவு வங்கி புனித ரம்ழான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் மாலை 7 மணி முதல் (மஹரிப் தொழுகையின் பின்னர்) இரவு 10.30 மணி வரை (தராவீஹ் தொழுகை) செயற்படும்.

இக்காலப்பகுதியில் சமூக நிகழ்வுகள், திருமண வைபவங்கள், பிறந்த நாள் வைபவங்கள் மற்றும் இப்தார் நிகழ்வுகளிலுள்ள மேலதிக உணவு பொருட்களையும் உணவு வங்கிக்கு வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்காவின் உணவு வங்கியினால் சேகரிக்கப்படும் பொருட்கள் பொதிகளில் அடைக்கப்பட்டு ரம்ழான் மாதத்தின் ஒவ்வொரு இரவுகளிலும் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் ஏழை குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு 0112815024 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 219,நாவல வீதி நுகேகொடையிலுள்ள முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா நிறுவனத்தையோ தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

## பூநகரிப் பிரதேசத்தில்

# குடிநீர் பிரச்சினையை தீர்க்க விரைவில் நடவடிக்கை

(பூநகரி)

பூநகரிப்பிரதேசத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் பூநகரி பிரதேச எல்லைக்குள் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய அப்பிரதேசத்திலுள்ள 80 தாங்கிகளுக்கு நீர் விநியோகம் செய்வதற்கு மாதத்திற்கு பிரதேசசபை நிதியில் இருந்து ஒன்றரை இலட்சம் ரூபா செலவு செய்யப்படுவதாக பிரதேச சபை செயலாளர் திருமதி எம்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இரு நாட்களுக்கொரு தடவை நான்கு பவுசர் மூலம் 40 ஆயிரம் லீற்றர் நீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.

அத்துடன் இனம் காணப்பட்ட சில நன்னீர்க்கிணறுகளில் இருந்து மட்டுமே நீர் பவுசர்களில் நீர் எடுக்கப்படுவதால் போதுமான நீரைப் பெறமுடியாமல் இருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கு மாற்றுவழி காணப்பட வேண்டுமெனவும் தற்போது கரிகோட்டுக் குளம், சென்பன் குண்டு குளத்தில் உள்ள நீரை இயந்திரம் மூலம் சுத்திகரித்து விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-84)

## [யாழ்.மாவட்டத்தில்]

# வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பின் பாராளுமன்ற ஆசனங்கள் அதிகரிக்கும்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை மீளவும் உயர்த்த முடியும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் 3 இலட்சத்து 20 ஆயிரம் யாழ்ப்பாண வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்க வேண்டியேற்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலமாக 1989 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே தாம் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை வரையறுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று வாக்காளர்கள் மீள் குடியேறினால் மீளவும் ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# அமெரிக்க அரசாங்கத்தைவிட அதிகளவு பணம் வைத்துள்ள ஆப்பிள் நிறுவனம்

அமெரிக்க அரசை விட ஆப்பிள் நிறுவனத்திடம் அதிக பணம் உள்ளதாம். உலகிலேயே சக்திவாய்ந்த அமெரிக்க அரசின் கஜானாவில்73.76 பில்லியன் டொலர் உள்ளது. ஆனால் உலகின் தலைசிறந்த தொழில்நுட்ப நிறுவனமான ஆப்பிளிடம் 75.87 பில்லியன் டொலர் உள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் இரு முக்கிய கட்சிகள் தேசத்தின் கடன் வரம்பை உயர்த்துவது குறித்து சண்டை போட்டுக் கொண்டுள்ளன.

உலகிலேயே மிகப்பெரிய நிறுவனம் அமெரிக்காவின் எண்ணெய் நிறுவனமான எக்ஸான் மொபில். இரண்டாவது இடத்தில் ஆப்பிள் உள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டில் ஆப்பிள் ஐபோனை அறிமுகப்படுத்தியதில் இருந்தே அதற்கு ஏறுமுகம்தான். அடுத்த 3 ஆண்டுகளில் ஆப்பிள் கிடுகிடுவென வளர்ந்து விட்டது. கடந்த ஆண்டு ஐபேடை அறிமுகப்படுத்தியது.

அது கோடிக்கணக்கில் விற்று அதிக இலாபம். ஐபோன் மற்றும் ஐபேட் தான் தற்போது சந்தையில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

இந்நிலையில் ஆப்பிள் நிறுவனத்தின் பங்கு ஒன்றின் விலை 400 டொலரைத் தொட்டுள்ளது.ஆப்பிளுக்கு அடுத்தபடியான பணக்கார நிறுவனம் பில்கேட்ஸின் மைக்ரோசொப்ட். அந்த நிறுவனத்திடம் 40 பில்லியன் டொலர் உள்ளது. (4)

# இந்தியா-பாக். பேச்சு ஊடகங்கள் பாராட்டு

(இஸ்லாமாபாத்)



இந்தியா – பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையே நடந்த பேச்சுவார்த்தையை, பாகிஸ்தான் மீடியாக்கள் வரவேற்றுள்ளன. பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினா ரப்பானி, அண்மையில் இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவை சந்தித்து, இரு தரப்பு உறவு குறித்து பேச்சு நடத்தினார்.

காஷ்மீர் விவகாரம், எல்லைப் பிரச்சினை, பயங்கரவாத ஒழிப்பு, வர்த்தகம் உள்ளிட்ட துறைகள் குறித்த அம்சங்கள், பேச்சுவார்த்தையில் இடம்பெற்றன. குறிப்பாக மும்பைத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மீது, பாகிஸ்தான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களுக்கும் இடையே, நடந்த இந்த பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் ஊடகங்கள், ஒருங்கிணைந்த செயற்பாடுகளில், இரு நாடுகளுக்கும் இடையே புதிய அத்தியாயம் ஆரம்பித்துள்ளது என வரவேற்றுள்ளன.

டெய்லி டைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட தலைப்புச் செய்தியில், புதிய அத்தியாயம் தொடங்குவதற்கு, இந்தியா - பாகிஸ்தான் உறுதி. உறவு மீண்டும் புதுப்பிப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோல், டான் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த உருது பத்திரிகைகளும், இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையை வெகுவாக பாராட்டி செய்தி வெளியிட்டுள்ளன. (4)

# புரட்சியில் ஈடுபட்டவர்களைக் கொன்று குவித்த முபாரக்கிடம் விசாரணை ஆரம்பம்



எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிடம் எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் விசாரணை நடத்தப்படவுள்ளது.

எகிப்தில் பல ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஹோஸ்னி முபாரக் மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

மக்கள் புரட்சி ஏற்பட்டதால் பதவியில் இருந்து அவர் தூக்கி எறியப்பட்டார். 83 வயதாகும் முபாரக் தற்போது ஷரம் எல்ஷேக்கில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் அரசுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டவர்களை கொன்று குவித்தது, ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து முபாரக்கிடம் எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் விசாரணை நடக்கும் என்று உள்துறை அமைச்சர் மன்சூர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முபாரக்கின் மகன்கள், ஆலா, கமால் ஆகியோரிடமும் விசாரணை நடக்கவுள்ளது, இதற்காக கெய்ரோவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (4-2)

# 67ஆண்டுகளாக காணாமல்போன ஓவியம் ஜேர்மனியில் கண்டுபிடிப்பு



19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற போலந்து ஓவியம் இரண்டாம் உலகப் போரின் போது மாயமானது. போலந்து மக்களால் போற்றப்பட்ட ஓவியக் கலைஞர் அலெக்சாண்டர் கெரிமிஸ்கியின் யூதப் பெண் ஆரஞ்சு விற்பனை செய்யும் காட்சியை வரைந்து இருந்தார்.

அந்த ஓவியத்தில் ஆரஞ்சு விற்பனை செய்யும் பெண் இரு கையிலும் ஆரஞ்சு கூடைகளுடன் இருப்பதையும் கடுமையானஎடை இருந்த போதும் உதட்டில் புன்னகையுடன் இருப்பது போல் காணப்பட்டது.

67 ஆண்டுகளுக்கு முன்னர் மாயமான இந்த ஓவியம் ஜேர்மனியின் ஹம்பர்க் ஏல மையத்தில் விற்பனைக்கு வந்த போது மீட்கப்பட்டது.போலந்து ஓவியம் சொந்த நாடு திரும்பியதை எண்ணி போலந்து மக்கள் அரிய புதையலை மீட்டதை போல உற்சாகம் அடைந்தனர்.

இரண்டாம் உலகப் போரின் போது மாயமானஓவியம் போலந்தின் வரலாற்று சிறப்புமிக்க ஓவியத்தை பொதுமக்கள் பார்வைக்கு கடந்த புதன்கிழமை போலந்து கலாசாரத்துறை அமைச்சர் போக்டன் சோ ஜெவி ஸ்கி திறந்து வைத்தார்.

ஆரஞ்சு விற்பனை பெண் ஓவியம் 1880-81 ஆம் ஆண்டில் வரையப்பட்டது. ஓவியர் அலெக்சாண்டர் கெரிமிஸ்கியின் பல ஓவியங்களில் வார்சாவின் வீதிகளில் வாழும் யூத மக்களை சார்ந்ததாக இது இருந்தது.

மூலிகை எண்ணெயில் வரையப்பட்ட அந்த ஓவியத்தில் போலந்து வார்சா வானம் பனி சூழலில் இருப்பதையும் காட்டுகிறது. போலந்தை நாஜி ஜேர்மனி ஆக்கிரமித்த நிலையில் 1944 ஆம் ஆண்டு இந்த ஓவியம் மாயமானது. (4-2)

# ஆப்கானில் வெடிகுண்டு தாக்குதல் பி.பி.சி. நிருபர் உட்பட 22 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் மூன்று இடங்களில் நடந்த தற்கொலைப்படை வெடிகுண்டு தாக்குதலில், பி.பி.சி. நிருபர் உட்பட 22 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானின் உரூஸ்கான் மாகாணத்தில் தலிபான்களை வேட்டையாடுவதற்காக, நேட்டோ படையினர் மற்றும் ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் டிரின்கோட் எனும் நகரில் மூன்று முறை மனித வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. இத்தாக்குதலில் குழந்தைகள் மற்றும் இப்பகுதியில் செய்தி சேகரிக்க சென்ற ஆப்கான் பிரிவு பி.பி.சி.நிருபர் ஓமித்கஹவல்காக் என்பவர் உட்பட 22 பேர் பலியாகினர். மேலும் 35 பேர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளாக இப்பகுதியில் தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டிற்குள் அமெரிக்க தலைமையிலான சர்வதேச படைகள் ஆப்கானை விட்டு வெளியேறவுள்ள நிலையில் தலிபான்கள் தாக்குதல் மேலும் தீவிரமடைந்து வருவது கவலையளிப்பதாக உரூஸ்கான் மாகாண ஆளுநரின் செய்தி தொடர்பாளர் மிலாத் முடாஸர் கூறினார். (ஸ்ரீ-2)




# லண்டன் அரச குடும்பத்தில் மீண்டுமொரு திருமண ஏற்பாடு

(லண்டன்)

இளவரசர் வில்லியம் கேத் மிடில்டன் ஜோடியின் ஆடம்பரத் திருமணத்தை தொடர்ந்து பிரிட்டன் அரச குடும்பத்தில் மற்றொரு திருமணம் நடக்கிறது. எனினும் ஆடம்பரம் ஏதும் இல்லாமல் மிக எளிமையாக இந்தத் திருமணம் நடத்தப்படுகிறது. பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் டயானா தம்பதியின் மூத்த மகனான வில்லியம் உலகே வியக்கும் வகையில் தன் நீண்டகால காதலியான கேத் மிடில்டனைஆடம்பரமாகத் திருமணம் செய்து கொண்டார்.

இவர்களின் திருமணம் நடந்து மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது இன்னொரு திருமணம் நடக்கிறது. தற்போதைய பிரிட்டன் ராணி எலிசபெத்தின் மகள் இளவரசி ஆன். இவரது மூத்த மகள் சாரா பிலிப்ஸ் (வயது 30). விளையாட்டு வீராங்கனையான இவரும் பிரிட்டன் ரக்பி அணி வீரர் மைக் டின்டால் என்பவரும் நீண்ட காலமாக காதலித்து வந்தனர். கடந்த 2003 ஆம் ஆண்டில் ரக்பி உலகக் கோப்பையை பிரிட்டன் வென்ற போது அணியின் கப்டனாக விளையாடியவர் டின்டால்.

சாராவும் டின்டாலும் அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் முதன்முதலாக சந்தித்துக் கொண்டனர். நீண்டகால காதலுக்குப் பின் நேற்று இந்த ஜோடி திருமணம் செய்து கொண்டது.

ஸ்கொட்லாந்து தலைநகர் எடின்பர்க்கில் உள்ள ராயல் மைல் சர்ச்சில் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன.

ஸ்கொட்லாந்து பாராளுமன்றின் அருகேயுள்ள இந்த சர்ச் 321 ஆண்டுகள் பழமையானது. அதன் பின் ராணி எலிசபெத்துக்கு சொந்தமான ஹோலிரூட் அரண்மனையில் இவர்களின் திருமண வரவேற்பு நடக்கிறது.

சாரா டின்டால் திருமணத்தில் பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் பங்கேற்றனர். சாராவுக்கென அரச குடும்பப் பட்டம் எதுவும் இல்லாததால் திருமணத்தின் போது அவருக்கு அரச மரியாதை எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# 4 ஆண்டுகளுக்கு முன் கடத்தப்பட்ட போர்த்துக்கல் சிறுமி மீட்கப்பட்டார்



போர்த்துக்கல் நாட்டில் 2007 ஆம் ஆண்டில் கடத்தப்பட்ட சிறுமியை காஷ்மீரின் லே பகுதியில் லண்டன் பெண் அடையாளம் கண்டார். இங்கிலாந்தை சேர்ந்த தம்பதி கேத் ஜெர்ரி மெக்கைன். இவர்கள் 2007 ஆம் ஆண்டு மே மாதத்தில் போர்த்துக்கல் நாட்டின் பரையா டாலஸ் என்ற நகருக்கு தங்களது 4 வயது மகள் மெடலினுடன் சுற்றுலா வந்தனர். அங்கு மெடலினுக்கு பிறந்த நாள் கொண்டாடினர். அதில் போர்த்துக்கலில் வசிக்கும் இங்கிலாந்து நாட்டு நண்பர்கள் பலர் பங்கேற்றனர். கூட்டத்தை பயன்படுத்தி சிறுமி மெடலினை யாரோ கடத்தி சென்றனர். இது தொடர்பாக போர்த்துக்கல் பொலிஸார் விசாரணை நடத்தினர். ஆனால் மெடலின் கடத்தல் பற்றி எந்த துப்பும் கிடைக்காததால் 2008 ஜூலையில் அந்த வழக்கை கைவிட்டனர்.

இந்நிலையில் மெடலினின் பிறந்த நாள் விழாவில் பங்கேற்ற லண்டனை சேர்ந்த பெண் ஒருவர் சமீபத்தில் காஷ்மீரின் லே பகுதிக்கு சுற்றுலா வந்திருந்தார். அங்கு மெடலினை அவர் அடையாளம் கண்டதாக கூறப்படுகிறது.

இப்போது 8 வயதாகும் அந்த சிறுமி பற்றி தன்னுடன் வந்திருந்த பயணிகளிடம் தெரிவித்தார். இதற்குள் சிறுமியை அமெரிக்காவை சேர்ந்த ஒருவர் அங்கிருந்து அழைத்து செல்ல முயன்றதாக கூறப்படுகிறது. ஆனால் அதைத் தடுத்த ஒரு தம்பதியினர் அவள் தங்கள் குழந்தை என்று கூறி மீட்டனர். இதுபற்றி காஷ்மீர் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டது. மெடலினின் பெற்றோர் கேத் ஜெர்ரி மெக்கைனுடன் அவர்கள் தொடர்பு கொண்டனர்.

இதையடுத்து அவர்கள் இருவரும் இந்தியா வர முடிவு செய்துள்ளனர். எனினும் அது மெடலின்தானா அவளை இதுவரை கவனித்து வந்தவர்கள் யார் என்பது பற்றி காஷ்மீர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் கேத் ஜெர்ரி தம்பதியின் மகள் தான் அவள் என்பதை நிரூபணம் செய்ய மெடலினுக்கு டி.என்.ஏ சோதனை நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர். (4-2)

நல்ல செய்திகளைக் கொண்டுவருபவன் துணி வோடு கதவைத் தட்டுவான். - ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஊடகத்துறையினரை பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பாகும்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு மூத்த ஊடகவியலாளர் ஞானசுந்தரம் குகநாதன் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டார் என்ற செய்தி மீண்டும் குடாநாட்டில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் யுத்தம் ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்றுவரை ஊடகத்துறை சார்ந்தவர்கள் பயங்கரமான சூழலிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை குகநாதன் மீதான தாக்குதல் மேலும் உறுதிப்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்து மண் ஊடகத்துறை சார்ந்த பலரைப் பறிகொடுத்து விட்டது.

இவர்களின் இழப்பு ஊடகத்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பு என்று கூறுவதற்கு முன்னதாக, அவர்களின் குடும்பங்கள் எத்துணை துன்பத்தில் தவிக்கின்றன என்பதை நினைக்கும்போது வேதனை தாழவில்லை.

உயிர் பறிக்கப்பட்ட ஊடகத்துறையினரின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் தற்போதைய நிலைமைகள் குறித்து தகவல்களை யாரேனும் சேகரிப்பார்களாகவிருந்தால், அவர்களின் குடும்பங்கள் எந்தவித நிவாரணமும் கிடைக்காமல் சீவனோபாயத்திற்கும்- பிள்ளைகளின் படிப்பிற்கும் வழி தெரியாமல் கண்ணீர் விடுவதைக் காணமுடியும்.

எனவே ஊடகத்துறை சார்ந்தவர்களைக் தண்டித்தல் என்பதற்கப்பால் அவர்களில் தங்கியிருக்கும் குடும்பத்தினர் படும் வேதனையையும் ஒருகணம் சிந்திக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

எனவே மீண்டும் மீண்டும் தொடருகின்ற ஊடகத்துறை சார்ந்தவர்கள் மீதாக தாக்குதலை நிறுத்துவதற்கு, தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

அதேசமயம் ஊடகத் துறைகளில் பணிபுரிபவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் ஊடக நிறுவனங்கள் அக்கறை கொள்வதும் அவசியமாகும்.

இன்றைய சூழ்நிலையில் தன்னைப் பாதுகாத்தல்- ஊடக நிறுவனத்தைப் பாதுகாத்தல்- அங்கு பணியாற்றும் பணியாளர்களைப் பாதுகாத்தல் என்றவாறான உறுதிப்பாடுகளும் அதற்கேற்ற செயற்பாடுகளும் அவசியமாகின்றன.


அந்த வகையில் ஊடகவியலாளர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களை அடியோடு நிறுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை நீதி பரிபாலனங்கள் எடுக்க வேண்டும்.

அதேசமயம் ஊடகங்களும் எழுந்தமானமாக எப்படியும் தகவல்களை வெளியிட முடியும் என்ற நினைப்போடு செயற்படாமல், ஒவ்வொரு தகவல்களுக்கும் பொறுப்புக் கூறக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் மற்றவர்களின் தனிப்பட்ட கௌரவங்களை பாதிக்காதவாறு நடந்துகொள்வதை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

அதேசமயம் நயத்தக்க நாகரிகத்துடன் விமர்சனங்களை செய்யும் போதே ஊடகங்கள் மீது மக்கள் பற்றுக்கொள்வார்கள் என்பதும் இங்கு நோக்குதற்குரியது.

## தன் உழைப்பால் ஈட்டிய பணத்தை சமூகத்தின் நலனுக்காக பண்படுத்தியவர்

### இராமலிங்கம் திருவாதிரை



சைவமும் தமிழும் தழைக்கப் பெரும் பணி ஆற்றுகின்ற பெருமக்கள் வாழும் காரை மண்ணில் சைவப்பாரம்பரியம் மிக்க ஒரு சராசரிக் குடும்பத்திற்தோன்றி தன்னுடைய அயராத உழைப்பினாலே வாழ்க்கையின் அதியுயர் இடத்தை அடைந்த போதும் தன் உழைப்பினாலே ஈட்டியசெல்வத்தைதன்னால்முடிந்தளவும் சிலநேரங்களில் தனது சக்திக்கு மேற்பட்டும் அறப்பணிக்கட்டு வழங்கிய அருந்தவச்செல்வர் இராமலிங்கம்திருவாதிரை அவர்கள்.

உயர்ந்த குணம், தெளிவான சிந்தனை, கனிவான பேச்சு, தளராத உறுதி, தாளாத கொடை, மாறாத வார்த்தை, பொறுமை, பணிவு, விருந்தோம்பல் போன்ற பல நற்பண்புகள் கொண்ட மாண்பினர். தன்வாழ்வுயர வழிசமைத்த ஸ்தாபனத்தையே ஒரு கோயிலாகப் பேணி வந்தவர். தன்னை நாடி வந்து அனைவரையும் தன் உறவுகளாகவே கருதி அவர்கள் தங்கள் வாழ்க்கைப் படிமுறையில் வளர வழி சமைத்தவர்.

பண்புடையார் பட்டுண்டு உலகு என்பது வள்ளுவன் வாக்கு. கலி காலத்திலும் இப்படியான சில மனிதர்களின் வாழ்வாற்தான் நிலம் நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அது மிகையில்லை.

வேரோடி விழுதுவிட்டு பரந்துவளர் ஆலமரமாய் சீரோடும் சிறப்போடும் விளங்கிய திருப்பதி நிறுவனத்தின் பெயரால் ஆற்றிய நல்லறங்கள் யாவும் என்றைக்கும் நன்றிக்குரியவை. காரைநகர் மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலும் உள்ள ஆலயங்களின் கும்பாபிஷேகமோ, மண்டலாபிஷேகமோ, திருப்பணியோ, அன்னதானமோ அதில் கட்டாயம் இவரின் பங்களிப்பு இருக் கும்.

நிலையாமை ஒன்றுதான் உலகின் நிலைத்த இயல்பு என்பதை நாம் காலங்காலமாக உணர்ந்திருந்தாலும் சிலரது மறைவு நெஞ்சை நெருடவே செய்கின்றது. அத்தகைய ஒருநிலையை சைவஆலயங்கள், சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், பல சபைகள், கழகங்கள், மன்றங்கள் போன்றவற்றிற்கு ஏற்படுத்திவிட்டு பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை அருளிலார்க்கு அவ்வுலகமில்லை என்னும் முதுமொழிக்கேற்ப இவ்வுலகில் வாழ்ந்த இவரின் ஆன்மா தில்லைக்கூத்தனின் திருவடியில் பிறவா வாழ்விற் திளைத் துப் பெருஞ்சாந்தி பெறும் என்பது திண்ணமாகும்.

### மறைந்தார் மாண்பு

மகாராணி க.சோமசேகரம் ஜே.பி.,
காரைநகர்

## யாழ்.மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கையை குறைப்பது அநீதி- மங்கள சமரவீர அறிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான தேர்தல் திணைக்களத்தின் தீர்மானம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இயல்பு வாழ்க்கை முழுமையாகச் சீரமைக்கப் பட்டபின்னரே அங்கு வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயல்புவாழ்க்கை முழுமையாக சீரமைக்கப்பட்ட பின்னரே அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து முடிபு செய்ய வேண்டும் என்றும், அதுவரை இந்த முடிபைச் செயற்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறும் தேர்தல் ஆணையாளரிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாக்காளர்கள் எண்ணிக்கை முன்னரை விட குறைவாக இருந்தால் அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இது இயற்கையானதோ, அல்லது இயல்பானதோ அல்ல.

இலங்கையில் இடம்பெற்ற நீண்ட காலப் போரினால் பாரம்பரிய நிலங்களிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப் பட்டுள்ளனர். அக் காலப்பகுதியில் நிர்வா செயற்பாடுகள் சரியாக இடம்பெற்றிருக்காது. போர் முடிவுற்ற பின்னரும் இன்னமும் படைத்தரப்பினரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள தமிழ் மக்கள் தமது இயல்பு வாழ்வைமீளமைத்துக்கொள்வதில்நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அதனை தென்னிலங்கையிலுள்ள மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை ஜனநாயக விரோதமானது என்றும் இவ்அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.நி

## நம் வாழ்வு வழியாகக் கடவுளின் வல்லமைமிக்க செயலை வெளிப்படுத்துவோம் (மத்:14:13-21)

இறையாட்சி மக்களிடையே வந்து கொண்டிருக்கின்றதை அவர்கள் கண் கூடாகக் காணும் விதத்தில் இயேசு பல அதிசயச் செயல்களையும் புரிந்தார். அச்செயல்கள் வழியாக அவர் மக்களுக்கு நன்மை கொணர்ந்தார். இத்தகைய அரும் செயல்களில் ஒன்று "ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்" ஆகும். பாலைநிலத்தில் திரளாகக் கூடியிருந்த மக்கள் கூட்டத்தை அனுப்பி விடும் என்று ஆலோசனை கூறிய சீடருக்கு இயேசு வழங்கிய பதில் "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" அவர்களுக்கு நிச்சயம் வியப்பைக் கொடுத்திருக்கும். எனவேதான் எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் தவிர வேறுஎதுவும் இல்லை என்று பதில் கொடுத்தனர்.

### பரமபிதா காட்டிய பாதை

நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் என சீடருக்கு இயேசு கூறிய கட்டளை நமக்கும் இரண்டு பாடங்களைக் கற்றுத் தருகிறது.

1.பரிவின் வெளிப்பாடாக பகிர்வு அமைய வேண்டும்.இயேசு திரளாகக் கூடியிருந்த மக்கள்மீது பரிவு கொண்டார். அன்பிலிருந்து தோன்றுகின்ற பரிவு தான் இயேசுவின் உள்ளத்திலிருந்து எழுந்த பாச உணர்வு.

2.உங்களிடம் என்ன இல்லை என்று பார்ப்பதைவிட என்ன இருக்கிறது என்று பார்க்கப் பணிக்கின்றார் இயேசு. என்ன இருக்கிறதோ அதை இறைவன் கையில் கொடுத்தால் அவர் வியப்புக்குரிய வகையில் அதைப் பலுகச் செய்வார்.

இயேசு "ஐயாயிரம் பேருக்கு உணவளித்த" இந்த மகிழ்ச்சியை நாம் பலகோணங்களில் இருந்து பார்க்கலாம். இஸ்ரேயல் மக்களுக்கு கட வுள் பாலைநிலத்தில் மன்னா என் னும் உணவை அளித்தது போல இங்கு இயேசு பசியுற்றோருக்கு உணவளித் துப் பாதுகாக்கின்றார். இயேசு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து "வானத்தை அண்ணாந்து பார்த்து கடவுளைப்போற்றி அப்பங்களைப் பிட்டுச்சீடர்களிடம் கொடுத்தார். சீடர்களும் மக்களுக்குக் கொடுத்தார்கள்".

மனித வரலாறு நிறைவுக்கு வரும் காலமும் இங்கே குறிக்கப்படுகிறது. கடவுளின் ஆட்சி முழுமையாக மல ரும் நாளில் எல்லா மக்களினத்தா ருக்கும் கடவுள் பெருவிருந்து அளிப் பார் என்னும் உருவகம் விவிலியத் தில் பல இடங்களில் வருகிறது. தேவைக்கு அதிகமாகவே உணவு தந்து அனைவரின் பசியையும் கட வுள் போக்குவார். அவர்களுக்கு முடிவில்லாப் பேரின்பம் அளிப்பார். இவ்வாறு பழைய ஏற்பாட்டு நினைவும் நற்கருணைக் கொண்டாட்ட நினைவும் இறுதிக் கால விருந்தின் நினைவும் உள்ளடங்கிய விதத்தில் மத்தேயு "அப்பங்கள் பலுகுதல்" நிகழ்ச்சியை வடிவமைக்கிறார்.



அத்துடன் எஞ்சியிருக்கும் உணவை வீணடிக்காமல் மக்களின் தேவையை நிறைவேற்ற வேண்டும். இன்று நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கேற்கும் நாம் இயேசு நமக்குத் தம்மையே உணவாகத் தருகின்றார் என்பதைக் கருத்தளவில் மட்டுமே ஏற்காமல் அக் கொண்டாட்டத்தின் விளை வாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் உணர்ந்து இயேசுவைப் போல மக்கள் மீது "பரிவு கொண்டு" செயற்பட அழைக்கப்படுகிறோம்.

ம. பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# பாகிஸ்தான் சிறையிலிருந்து 24 இந்தியர்கள் விடுதலை

பாகிஸ்தானில் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த 14 மீனவர்கள் உட்பட 24 இந்தியர்களை அந்நாட்டு அரசு விடுதலை செய்தது. கராச்சி சிறையில் கடந்த 8 மாதங்களாக அடைக்கப்பட்டிருந்த 14 இந்தியர்களை வியாழக்கிழமை விடுதலை செய்து உத்தர விட்டது பாகிஸ்தான் அரசு. இதையடுத்து இரு பெண்கள் உட்பட 10 இந்தியர்களை விடுதலை செய்து வெள்ளிக்கிழமை உத்தர விட்டது.

இந்த 24 பேரையும் வாகா எல்லை வழியாக அழைத்து வந்து இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைத்து விட்டதாக பாகிஸ்தான் வனத்துறை செய்தித் தொடர்பாளர் மஹ்பூப் ஹுசைன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் அரசு தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் நல்லெண்ண அடிப்படையில் இந்திய மீனவர்களை விடுவித்ததாக கூறப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்பு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹுனா ரப்பானி இந்தியாவுக்கு வருகை தந்தார். அவர் வருவதற்கு முன்னதாக இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த 87 பாகிஸ்தான் மீனவர்களை விடுவித்து இந்திய அரசு உத்தர விட்டது குறிப்பிடத்தக்கது. (4-2)

## தெலுங்கானா விவகாரத்தில் மத்திய அரசுக்கு பொறுப்பு

தெலுங்கானா விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மத்திய அரசுக்குத்தான் உள்ளது என தெலுங்குதேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார். இது குறித்து சந்திரபாபு நாயுடு கூறியதாவது, தெலுங்கானா தனி மாநில கோரிக்கை விவகாரத்தில், முடிவெடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மத்திய அரசுக்கு உள்ளது. தெலுங்கு தேசம் கட்சியோ, மற்ற கட்சிகளோ இதை வலியுறுத்த முடியாது.

கடந்த மே மாதம் நடந்த எங்கள் கட்சியின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் தெலுங்கானா விவகாரம் குறித்த எங்களது நிலையை, தீர்மானமாக நிறைவேற்றியுள்ளோம். அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். மத்திய அரசு என்ன முடிவெடுக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தமாட்டோம் என சந்திரபாபு நாயுடு கூறினார். (4-2)

# திடீரென கைது செய்யப்பட்ட ஸ்டாலின் நேற்று விடுதலை

(திருவாரூர்)

திருவாரூர் அருகே நிகழ்ச்சியில் பங்கேற்ற சென்ற தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினை பொலிஸார் திடீரென மடக்கி கைது செய்தனர். அவருடன் இருந்த மத்திய அமைச்சர் பழனி மாணிக்கம், முன்னாள் அமைச்சர் மதிவாணன், திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன், ஏ.கே விஜயன் எம்.பி உட்பட தி.மு.க முன்னணியினரும் கைது செய்யப்பட்டனர். இதை கண்டித்து திருவாரூரில் தி.மு.க வினர் மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் திருவாரூர் மாவட்டத்தில் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருந்தார். இதற் காக நேற்று முன்தினம் விமானத்தில் திருச்சி வந்து அங்கிருந்த கார் மூலம் தஞ்சை வந்தார்.

திருத்துறைப்பூண்டி நோக்கி கார் சென்று கொண்டிருந்தது. வழியில் ஆலத்தம்பாடி என்ற இடத்தில் திருவாரூர் டிஎஸ்பி சீனிவாசன் தலைமையில் 200 பொலிஸார் சாலையை மறித்தபடி நின்றிருந்தனர். இதைப் பார்த்ததும் ஸ்டாலின் கார் சாரதி வண்டியை அவசரமாக நிறுத்தினார். பின்னால் வந்து கொண்டிருந்த தி.மு.க.வினரின் கார்களும் நிறுத்தப்பட்டன.

ஏதோ சதித்திட்டம் போல நடக்கிறது என்று கூறி பொலிஸாருடன் ஸ்டாலின் வாக்குவாதம் செய்தார். மத்திய அமைச்சர் பழனிமாணிக்கம், விஜயன் எம்.பி, முன்னாள் அமைச்சர் மதிவாணர் ஆகியோரும் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அவர்களின் கைது குறித்து காரணம் கூறாமையால் தானும் வருகிறேன் என்று கூறி பொலிஸ் வாகனத்தில் மு.க.ஸ்டாலின் ஏறினார். பூண்டி கலைவாணனுடன் மு.க.ஸ்டாலினும் பொலிஸ் வாகனத்தில் சென்றுள்ளதால் அப்பகுதியில் உள்ள தி.மு.க. வினிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. பொலிஸ் நிலையம் சென்றடைந்ததும் திருவாரூரில் அம்மாவட்ட தி.மு.க செயலாளர் பூண்டி கலைவாணனை மட்டும் வைத்துக்கொண்டு தி.மு. பொருளாளர் மு.க.ஸ்டாலின் உட்பட தி.மு.க வினர் பலரைபொலிஸார் விடுவித்தனர். (2-4)

# பாரதச் செய்திகள்

## பா.ம.க முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசு மீண்டும் கைதானார்

(சேலம்)

நிலமோசடி வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பா.ம.க முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசு சாதி பெயரை சொல்லி திட்டிய வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். சேலம் மாவட்டம் ஓமலூர் அடுத்த காமலாபுரத்தில் நிலத்தை அபகரித்ததாக ஓமலூர் தொகுதி பா.ம.க முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசு உள்ளிட்டோர் மீது மாவட்ட நிலமீட்பு பிரிவு பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

கேரளா மாநில கோழிக்கோட்டில் பதுங்கி இருந்த தமிழரசுவை பொலிஸார் கைது செய்து சேலம் மத்திய சிறைச்சாலையில் அடைத்தனர்.

இந்நிலையில் முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசு சாதி பெயரை சொல்லி திட்டிய வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டார். கடந்த 2009 ஆம் ஆண்டு ஓமலூரைரச் சேர்ந்த பால முருகன் ஓமலூர் பொலிஸில் கொடுத்த புகாரில் ஓமலூர் சுங்கச்சாவடியில் பணியாற்றிய தன்னை அப்போதைய எம் எல் ஏ தமிழரசு மற்றும் 3 பேர் சாதி பெயரை சொல்லி திட்டி தாக்கியதாக கூறியிருந்தார்.

வழக்கு பதிவு பொலிஸார் தமிழரசை சுற்றி வளைத்தனர். ஆனால் கைது செய்யவில்லை. இதையடுத்து உயர்நீதி மன்றத்தில் முன்ஜாமீன் கேட்டு தமிழரசு மனு தாக்கல் செய்தார். அதில் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டது. ஆனால் அவர் தலைமறைவாகி விட்டதாக பொலிஸார் தெரிவித்ததால் வாரண்ட் பிறப்பித்து கடந்த இரண்டு ஆண்டுகளாக பொலிஸார் தேடிவந்தனர்.

இந்நிலையில் நில மோசடி வழக்கில் கைதாகி சிறையில் உள்ள தமிழரசுவை சாதி பெயரை சொல்லி திட்டிய வழக்கில் பொலிஸார் கைது செய்தனர். சேலம் சிறையில் உள்ள அவரை பொலிஸார் நேற்று ஓமலூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். (4)




நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் சிறையிலிருந்த இந்திய கைதிகள் 24 பேர் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் அட்டாரி-வாகா எல்லை வழியாக வருவதைப் படத்தில் காணலாம்.


# பிரான்ஸ் நாட்டு தயாரிப்பான மிராஜ் விமானங்களை புதுப்பிக்க ஒப்பந்தம்

(புதுடில்லி)

இந்திய விமானப்படையில் உள்ள 2000 ரக போர் விமானங்களை ரூ10800 கோடி செலவில் புதுப்பிக்க பிரான்ஸ் நிறுவனத்துடன் இந்தியா நேற்று முன்தினம் ஒப்பந்தம் செய்துள்ளது.

பிரான்ஸ் நாட்டு தயாரிப்பான மிராஜ் 2000 ரக போர் விமானங்கள் இந்திய விமானப்படையில் கடந்த 80 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டன. கார்கில் போரில் மிராஜ் ரக போர் விமானங்கள் முக்கிய பங்காற்றின.

விமானப்படையில் தற்போதுள்ள 51 மிராஜ் விமானங்களை புதுப்பிக்க விமானப்படை முடிவு செய்தது. இதுபற்றி பிரான்ஸ் நாட்டின் தலஸ் மற்றும் டாசால்ட் ஏவியேஷன் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இது கடந்த ஐந்தாண்டுகளாக இழுபறியில் இருந்தது. இந்நிலையில் புதுப்பிப்பதற்கான செலவு 10 ஆயிரத்து 800 கோடி என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம்



செய்ய மத்திய அமைச்சரவையின் பாதுகாப்பு குழு சமீபத் தில் ஒப்புதல் அளித்தது. அதன்படி பிரான்ஸ் நிறுவனத்துடன் அதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா நேற்று கையெழுத்திட்டது.

மிராஜ் விமானங்களில் தற்போதைய அதிநவீன வசதிகள் சேர்க்கப்பட உள்ளன. மேலும்இலத்திரனியல் போர் கருவிகளும் ரேடர்களும் புதுப்பிக்கப்பட உள்ளன. இதன் மூலம் மேம்படுத்தப்பட்ட மிராஜ் விமானங்களை இன்னும் 20 முதல் 25 ஆண்டுகளுக்கு விமானப்படை பயன்படுத்த முடியும் என்று விமானப்படை அதிகாரிகள் கூறினர். (2)

# ஜெயாவின் சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை மேற்கொள்ள வேண்டாம்

## இலஞ்ச ஊழல் பொலிஸார் பணிப்பு

(பெங்களூர்)

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் எதிர்வரும் ஓகஸ்ட்மாதம் 4 ஆம் திகதி வரை மேல் விசாரணை நடத்தக்கூடாது என்று தமிழக இலஞ்ச ஒழிப்பு பொலிசாருக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் தனி நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் கடந்த 10 நாட்களுக்கு முன்பு புதிய மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில் சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதாவும் மற்ற மூவரும் தமிழக இலஞ்ச ஒழிப்பு பொலிஸாரும் இரகசியமாக இணைந்து செயற்படுகின்றனர். அதனால் தான் சொத்துகுவிப்பு குற்றச்சாட்டு பற்றி மேல் விசாரணை நடத்த இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

தனி நீதிமன்றத்தில் ஏற்கனவே இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் சாட்சிகளை கலைக்கவும் ஏற்கனவே விசாரணையில் திரட்டப்பட்ட ஆதாரங்களை அழிக்கவும்தான் இப்படி செய்யப்படுகிறது. எனவே மேல் விசாரணைக்கு அனுமதி கோரும் மனுக்களை ஏற்க கூடாது என்று அன்பழகன் கூறியுள்ளார்.

இந்த மனு நீதிபதி ஜெகன்னாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசார ணைக்கு வந்தது. அன்பழகன் சார்பில் வழக்கறிஞர் நாகேஷ் ஆஜராகி வாதிட்டார். பின்னர் நீதிபதி ஜெகன்னாதன் அளித்த தீர்ப்பில் ஜெயலலிதா சொத்து குவிப்பு வழக்கில் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை தமிழக இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் மேல் விசாரணை எதையும் செய்யக் கூடாது. இந்த உத்தரவை மீறி செயற்பட்டால் நீதிமன்றம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரித்தார். மேலும் விசாரணையை ஓகஸ்ட் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (2-4)

# 2-வது டெஸ்ட்: ராவிட் சதம் நம்பிக்கையளிக்க; இங்கிலாந்து வேகத்தில் சரிந்தது இந்திய அணி

தோனி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இவ் இரு அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி டிரென்ட்பிரிட்ஜில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இந்த டெஸ்டில் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 221 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்திய தரப்பில் பிரவீன் குமார், இஷாந்த் சர்மா, சிறிசாந்த் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். அடுத்து இந்திய அணி முதல் இன்னிங்சை ஆடத்தொடங்கியது.

முதல்பந்திலேயே தமிழக வீரர் அபினவ் முகுந்த் (0) அண்டர்சன் பந்துவீச்சில் பீற்றர்சனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து ராகுல் டிராவிட்டும், லக்ஸ்மனும் இணைந்து தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தினர். இந்திய அணி 13 ஓவர்கள் நிறைவில் முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 21 ஓட்டங்களை எடுத்திருந்தது. டிராவிட் 7 ஓட்டங்களுடனும், லக்ஸ்மன் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.


இந்நிலையில் 2-ம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த அவர்கள் சிறப்பான அடித்தளம் அமைத்தனர். தொடக்க ஓவர்களில் இவர்களை வீழ்த்த இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

லக்ஸ்மன் 54 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பிரஸ்னன் பந்துவீச்சில் வெளியேறினார். ராவிட்-லக்ஸ்மன் ஜோடி 2-வது விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

இதன் பிறகு களமிறங்கிய சச்சின் நிதானமாக விளையாட மறுமுனையில் டிராவிட் அரைச் சதத்தை பூர்த்திசெய்தார். சச்சின் 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்து 100-வது சதத்தை பூர்த்தி செய்ய முடியாமல் ஏமாற்றம் அடைந்தார். அதனைத் தொடர்ந்து களமிறங்கிய சுரேஸ் ரெய்னா 12 ஓட்டங்களில் அண்டர்சன் பந்துவீச்சில் வெளியேறினார்.

இதையடுத்து ராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார் யுவராஜ் சிங். உலகக் கோப்பைக்கு பிறகு முதல் முறையாக களமிறங்கிய யுவராஜ் ஆரம்பம் முதலே அசத்தலாக விளையாடினார்

இந்த ஜோடி இங்கிலாந்து பந்து வீச்சாளர்களை எளிதாக எதிர்கொண்டது. அவ்வப்போது பவுண்டரிகளை விளாச இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கைஅதிகரித்தது. 94 பந்துகளில் யுவராஜ் அரைசதம் அடித்தார் அவரைத் தொடர்ந்து ராவிட் தனது 34-வது டெஸ்ட் சதத்தை விளாசி சாதனை படைத்தார்.



இந்திய அணி 85.4 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 266 ஓட்டங்களை எடுத்திருந்தது. அடுத்து யுவராஜ்சிங 62 ஓட்டங்களுக்கு பிரோட்டின் பந்துவீச்சில் பிரையரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்திய அணி 271 ஓட்டங்களை பெற்றிருந்த போது 87ஆவது ஓவரில் பந்து வீச பிரோட் வந்தார். அவரின் ஓவரின் 3-வது பந்தில் தோனி 5 ஓட்டங்களுக்கும், 4ஆவது பந்தில் ஹர்பஜன் சிங்கும் ;5ஆவது பந்தில் பிரவீன் குமாரும் ஓட்டமேதும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். இதன் மூலம் ஹட்ரிக் சாதனை படைத்தார் பிரோட்.

இந்திய அணியின் விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரிந்தாலும் மறுமுனையில் நிலைத்து நின்ற ராகுல் ராவிட் 235 பந்துகளில் 117 ஓட்டங்களைப் பெற்றபோது பிரஸ்னனின் பந்தில் குக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதி விக்கெட்டுக்காக சிறிசாந்தும் இஷாந்த் சர்மாவும் ஜோடி சேர்ந்தனர். இவர்களில் இஷாந்த் சர்மா 3 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பிரோட்டின் வேகத்தில் விக்கெட்டை பறிகொடுக்க இந்திய அணி 288 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் இந்திய அணி இங்கிலாந்தை விட 67 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த நிலையில் இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்ஸை ஆடி வருகிறது. இந்நிலையில் 2-வது நாள் ஆட்டநேரமுடிவில் இங்கிலாந்து அணி 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்துள்ளது.

# பி.சி.சி.ஐயின் மோசமான திட்டமிடலால் இந்தியாவுக்கு தோல்வி - அக்ரம்

(புதுடெல்லி)

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ) போட்டி திட்டமிடலில் இருந்த குறைபாடு காரணமாகவே லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு தோல்வி ஏற்பட்டது என்கிறார் பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரம்.

இது குறித்து இ.எஸ்.பி.என்.ஸ்டார் தொலைக் காட்சிக்கு அளித்த போட்டியில் அவர் கூறியிருப்பதாவது;

பி.சி.சி.ஐயின் சிறப்பான செயல்பாடு காரணமாகவே இந்தியக் கிரிக்கெட் அணி இந்த அளவுக்கு சிறப்பான அணியாக உருவெடுத்தது. ஆனால் இப்போது இங்கிலாந்திடம் தோற்றதற்கு இந்தியாவின் துடுப்பாட்டம், பந்துவீச்சு மட்டுமல்ல, அணி நிர்வாகத்தின் திட்டமிடலில் இருந்த குறையும்தான்.

இங்கிலாந்து தொடருக்காக இந்திய அணி முழு அளவில் தயாராகவில்லை. இங்கிலாந்து தொடருக்கு முன் இந்திய அணி மேற்கிந்தி யத் தீவுகளுடன் டெஸ்ட் போட்டியில் விளையாடியது. அது இங்கிலாந்து தொடருக்கான சரி யான பயிற்சி அல்ல. லோர்ட்ஸில் ஏற்பட்ட தோல்வி அதை நிரூபிப்பதாக அமைந்தது என்றார்.

எதிர்வரும் காலங்களில் ஐ.சி.சியின் போட்டி அட்டவணை மற்றும் இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளுக்கு பி.சி.சி.ஐ போதிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அக்ரம், பி.சி.சி.ஐ. தனது செல்வாக்கால் வீரர்களையும் அவர்களுடைய திறமையையும் அழிக்கிறது. இது பொன் முட்டைக்காக வாத்தையே கொல்வது போன்ற முட்டாள்தனமான செயல்.

எனவே முன்னணி வீரர்களால் எவ்வளவு போட்டிகளில் விளையாட முடியும் என்பதை தெரிந்துகொண்டு அதற்கேற்றாப்போல் போட்டி அட்டவணையை முடிபு செய்ய வேண்டும். இங்கிலாந்து அணி சரியாக போட்டி அட்டவணையை திட்டமிடுகிறது. அதனாலேயே அந்த அணி இப்போது சிறப்பாக விளையாடி வருகிறது என்றார்.

# இது சச்சினின் 100 வது டெஸ்ட்

இந்தியா - இங்கிலாந்து அணிகளிடையி லான 2 வது டெஸ்ட் போட்டி, சச்சின் அந்நிய மண்ணில் விளையாடும் 100-வது டெஸ்ட் போட்டியாகும்.

இது அவரது 179-வது டெஸ்ட் போட்டியாகும். அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையா டிய வீரர்கள் பட்டியலிலும் அவருக்கே முதலிடம்.

இதுவரை 14 ஆயிரத்து 738 ஓட்டங் களை குவித்துள்ள அவர் (அதிகம் 248*, சராசரி 56.68, சதம்51, அரைசதம் 59 ), வெளிநாடுகளில் விளையாடிய போட்டிகளில் மட்டும் 8 ஆயிரத்து 191 ஓட்டங்களை விளாசியுள்ளர்.

அவரது 51 டெஸ்ட் சதங்களில், 29 சதம் வெளி நாட்டுமைதானங்களில் அடிக்கப்பட்டவையாகும்.

# உலகக் கோப்பை கால்பந்து; வெளியேறியது இந்தியா



எதிர்வரும் 2014 இல் பிரேசிலில் நடக்கவுள்ள பிபா உலகக்கோப்பை கால்பந்து தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இந்திய அணி இழந்துள்ளது.

பிரேசிலில் வரும் 2014 ம் ஆண்டு பிபா உல்கக்கோப்பை கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச்சுற்றுப்போட்டிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நடந்து வருகிறது. இதில் ஆசிய பிரிவுக்கான இரண்டாவது சுற்றில் பிபா தரவரிசையில் 153 வது இடத்தில் உள்ள இந்திய அணி 109 வது இடத்தில் உள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ) அணியை எதிர்கொண்டது

இதில் 2 போட்டிகள் நடந்தது. டுபாயில் நடந்த முதல்போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் டில்லியில் 2-வது போட்டி நடந்தது மழை காரணமாக போட்டி அரை மணிநேரம் தாமதமாக தொடங்கியது. தவிர மைதானத்தில் தண்ணீர் தேங்கியிருந்ததால் பந்தை சரியாக கடத்த முடியவில்லை

தொடக்கத்திலிருந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய யு.ஏ.இ அணிக்கு ஆட்டத்தின் 39 வது நிமிடத்தில் முகமது அல்ஷேக்கி முதல்கோல் அடித்து நம்பிக்கை அளித்தார்.

இதற்கு இந்திய வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் யு.ஏ.இ அணி முதல் பாதிமுடிவில்1-0 என முன்னிலை வகித்தது.

2-வது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த யு.ஏ.இ அணிக்கு அணித் தலைவர் அலி அல் வெஹறபி 71 வ து நிமிட த்தில் கோலடித்து 2-0 என முன்னிலை பெற்று தந்தார். இதற்கு 74 வது நிமிடத்தில் இந்தியாவின் ஜேஜி லால் பெகுலா அதிரடி கொடுத்தார். தொடர்ந்து போராடிய இந்திய அணிக்கு 92-வது நிமிடத்தில் கவுரமாங்கி சிங் ஒரு அசத்தல் கோல்அடிக்க ஆட்ட நேர முடிபில் 2-2 என சமநிலையானது.

இரண்டு போட்டிகளின் முடிபில் யு.ஏ.இ அணி 5-2 என்ற கோல்கணக்கில் 3 வது சுற்றுக்கு தகுதி பெற்றது.



பேங்க் ஆப் வெஸ்ட்கிளாசிக் டென்னிஸ் தொடரின், இரண்டாம் சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா கிரிலென்கோவை வீழ்த்தினார். இந்த உற்சாகத்தில் ஆர்ப்பரித்த செரினா.




பேங்க் ஆப் வெஸ்ட்கிளாசிக் டென்னிஸ் தொடரின், இரண்டாம் சுற்றில் ஜெர்மனியின் லிசிகி, ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரை வீழ்த்தினார். இம்மகிழ்ச்சியில் லிசிகி.

# அமெரிக்க சர்வதேச டென்னிஸ்; அரையிறுதியில் சானியா ஜோடி

(காலேஜ் பார்க்)

அமெரிக்காவின் காலேஜ் பார்க்கில் நடைபெற்று வரும் சிட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் அரையிறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் சானியா-கஜகஸ்தானின் யாரோஸ்லாவா ஜோடி முன்னேறியுள்ளது.

இந்த ஜோடி காலிறுதிச் சுற்றில் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் லின்ட்ஸலி- மேகன் மெல்டன் ஜோடியை வீழ்த்தியதன் மூலம் அரையிறுதிக்கு முன்னேறியது.



# வடமாகாண சபையில்...

வடக்கு மாகாணத்தில் சிங்கள அதிகாரிகளை நியமிக்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்த சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு யாழ் மாவட்டத்தில், முன் அனுபவப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும்,

இதற்காக யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் இவர்கள் பயிற்சி பெற்று வருவதுடன் வெளிக் களங்களுக்கும் சென்று வடபகுதியின் நிர்வாக அமைப்புக்களைத் தெரிந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை வடக்கு மாகாண சபையில் கடமையாற்றிய 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் சேவைக்கான ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இவ்வாறு 60 வயதிற்கு மேற்பட்டவரின் இடங்களுக்கு சிங்களவர்கள் நியமிக்கப்படலாம் எனவும் இதன் அடிப்படையிலேயே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் ஆளுநரின் செயலாளராகவும், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன் கல்வி அமைச்சின் செயலாளராகவும் சுகாதார அமைச்சின் செயலாளராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை சிங்கள அதிகாரிகள் வடபகுதியில் கடமையாற்ற வேண்டும் என ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

# ஐ.நா. அலு...

அவ்வறிக்கையில் இலங்கையின் மனிதாபிமான செயல் திட்டங்களை மேற்கொண்டு வரும் தமது செயற்பாடுகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வ்ழங்குமாறு தாம் அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும் அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# திருமண...

எதிர்ப்புவெளியிடப்பட்டதன் காரணமாக அப்போது திருமணவயதெல்லையைக் குறைக்க முடியவில்லை. எவ்வாறாயினும் திருமண வயதெல்லையை 15 வயது வரையாவது குறைப்பதற்கான முயற்சிகளை மேற் கொள்வதாக பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே.செனவிரட்ண கூறினார். (ந)

# இலங்கை போன்ற...

உரையாற்றும்போதே பசில் ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

ஈரானிய இஸ்லாமிய குடியரசின் நிதியுதவியின் மூலம் இலங்கையில் பாரிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நிதியுதவி மூலம் இலங்கையில் பாரிய நீர்விநியோகத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆயிரம் கிராமங்களுக்கான மின் சாரத்தை பெற்றுக்கொடுக்கும் பாரிய திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்திக்கு மட்டுமல்லாது மனிதாபிமான அடிப்படையிலும் பாரிய உதவிகளை ஈரானிய அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் இலங்கை போன்ற நாடுகளின் வளர்ச்சியை மேற்குலகு அழிக்கத் திட்டமிட்டுவருகின்றது என்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (ந)

# பிரித்...

டையும் விடுதலைப்புலிகளின் தலைவர்களை கொன்று விடுமாறு கோத்தபாய ராஜபக்ஷவும், மேஜர்ஜெனரல் சவேந்திர சில்வாவும் படைத் தரப்பினருக்கு உத்தர விட்டிருந்த தாக படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் சனல்4தொலைக்காட்சிக்கு கடந்த27ஆம் திகதி ஒளிபரப்பிய புதிய காணொளியில் தெரிவித்திருந்தனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி தொடர்ச்சியாக ஆதாரங்களை வெளியிட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ந)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி பேபி



யாழ்.புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி பேபி 30.07.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி ஆச்சாரியின் அன்புச் மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், தங்கம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதன், இரத்தினபூபதி, சிரோன்மணி, செல்லம்மா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடேசு, மகாலிங்கம், காலஞ்சென்ற குணரட்ணம், பராசக்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 31.07.2011 காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

108/9, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
T.P.: 0213219253

தகவல்:
சி.உத்தரதாசன்
(பேறாமகன்)

(5202)


**ஆட்கள் தேவை**

பத்திரிகை மடிப்பதற்கு ஆட்கள் (ஆண்கள்) தேவை.
நேரில் வரவும்.
வலம்புரி

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி நகரின் மத்தியில் ஏ-9 வீதியிலிருந்து 50 மீற்றர் உட் பகுதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0772208327

(5518)



உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

வெளிநாட்டுக் கல்வி
Student Visa
எங்கே, என்ன படிக்கலாம்? IELTS அவசியமில்லையா?
Student Visa வில் போய் பணம் சம்பாதிக்க முடியுமா?
அகதி அந்தஸ்து பெறுவது சாத்தியமா?
குடியுரிமை பெற என்ன வழி?
உண்மை நிலை என்ன?
அவசரப்பட்டு பணத்தைச் செலவுசெய்ய முன்
உண்மை நிலையை அறிந்துகொள்ள வாருங்கள்!
Panel of Experts:
தேவராஜன் றெங்கன் ▸ Solicitor – UK, சட்டத்தரணி - இலங்கை
றொகான் விஜேசூரிய ▸ Sri Lankan Rep. The University of Greenwich, UK
சு.ஜீவசுதன் ▸ Phd Candidate, University of Science, Malaysia
கோ.றுஷாங்கன் ▸ Sri Lankan Rep. Nottingham Malaysia, Monash Sunw... SEGi, INTI & 5 Other University Colleg...
மேலும், Video Conferencing மூலம்
பிரித்தானியாவில் கல்வி கற்கும் யாழ் மாணவர்கள்
காலம்: ஒகஸ்ட் 6, சனிக்கிழமை காலை 10.00மணி
இடம்: நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
அனுமதி இலவசம்! முற்கூட்டிய பதிவுகளுக்கு: சுகுணா - 021 300 80 6...
MEDIA
கல்வி வழிகாட்டல் பிரிவு, சிகரம் ஊடக இல்ல...
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 0773 616 798
அனைவருக்கும் கட்டுபடியான கல்வி


# நிருபமா ராவை...

ராவ் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து இந்திய அரசாங்கம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என நிருபமா ராவ் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் சனல்4 தொலைக்காட்சியின் ஆவணப்படம் தொடர்பிலும் இலங்கை... இடம்பெற்ற இறுதிக்கட்டப் போ... போது மேற்கொள்ளப்பட்ட ம... உரிமை மீறல்கள் தொடர்பிலும் ...ணிப்பாக அவதானிக்க வேண்... அவர்வலியுறுத்தியுள்ளதாக... ...ப்பட்டுள்ளது.

அத்துடன் மனித உரிமை... களை எவ்வகையிலும் நியா... படுத்த முடியாது என செவ்வி... அவர் சுட்டிக்காட்டியுள்ளதாக... இச் செய்தியில் தெரிவிக்கப்பட்...ளது.


DHL
உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்
London Rs750
CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900
220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலா... திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது. DHL Online Trackin...
TCN Express, 2B,Nelsan place,Colombo-06.
Customer service No.021 222 7835
குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம்நெற்
இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18.பிரதானவீதி.நெல்லியடி. இல.05.திருநகர் பிரதான வீதி.கிளிநொச்சி. இல.46.ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.

WES
World Express Servives
International & Local Courier Service
குறைந்த செலவிலும், துரிதமாகவும், உங்கள் உறவுகள் மற்றும் நண்பர்களுக்கு பரிசுப்பொதிகள், கடிதங்கள் போன்றவற்றை அனுப்பி வைக்க இன்றே எங்களை நாடுங்கள்
நீங்கள் அனுப்பும் பொதிகள் 3,4 நாட்களில் உங்கள் உறவினர்களின் கைகளில் ஒப்படைக்கப்படும்
10kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
உங்கள் பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைக்க நாங்கள் தயார். எங்களை தொடர்பு கொள்ள நீங்கள் தயாரா?
தலைமை அலுவலகம்: 338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு -15 தொ.பே: 0112520894
கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (இந்திய தூதரகத்திற்கு அருகாமை) தொ.பே: 021 2220356
E.Mail: Worldexpress.ser@gmail.com
கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி: வைரவ புளியங்குளம்,வவுனியா தொ.பே: 024 490 3200


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2-ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்...